ஓம்

திருச்சிற்றம்பலம்

செந்தமிழ்ச் செல்வி

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினின்றும்
திங்கள்தோறும் வெளிவருவது

சிலம்பு சா	மெய்கண்டான்யாண்டு-எாரு கார்த்திகைத்திங்கள் 1928௵ நவம்பர்௴—டிசம்பர்௴	பரல் கக

தேமாங்கனி கடுவன்கொள விடுகொம்பொடு தீண்டித்
தூமாமழை துறுவன்மிசை சிறுநுண்துளி சிதற
ஆமாம்பிணை யணையும்பொழி லண்ணாமலை யண்ணல்
பூமாங்கழல் புனைசேவடி நினைவார்வினை யிலரே.

(சம்பந்தர்)

உரை:

‘இனிப்பான மாம்பழங்களை ஆண் குரங்குகள் இழுத்துப் பறித்தலால், அவற்றின் கைகளிலிருந்து விடுபட்டு விசையாக மேல் நிமிரும் மரக்கொம்புகளோடு ஆங்குத் தவழ்ந்தோடாநின்ற தெளிவான கரிய மழைமேகக் கூட்டங்கள் பட்டு, அம் மரக்கொம்புகளின் செறிவிடையே சிறிய நுண்ணிய மழைத்துளிகளைச் சிதறித் தூளிக்க, அதனாலாகும் நீரின் பொருட்டு மான்பிணைக் கூட்டங்கள் அணைகின்ற சோலைகள் நிரம்பிய திருவண்ணாமலையின் மலைக்கணெழுந்தருளியிருக்கும் அருட்பெருமை பொருந்திய சிவபெருமானுடைய பூப்போலும் அழகிய கழன் மணி யணிந்த சிவந்த திருவடிகளை நாளும் நினைந்துருகுகின்றவர்கள் வினையில்லாதவராவார்கள்.’

கடுவன் ஆண் குரங்குக்குப் பெயராதலை,

“மூட்புற முதுகனி பெற்ற கடுவன்
றுய்த்தலை மந்தியைக் கையிடூஉப் பயிரும்”

என்னும் புறநானூற் (கநிஅ, உங-உச) றடிகளிற் கண்டுகொள்க. ‘தூமா’ வென்பதில் மா, கருமைப்பொருளது. அது ‘மாவும்......கருநிறத் தபி

தானம்மே' (௭, பெயர்ப்பிரிவு, ௧௭௭) என்னும் பிங்கலந்தையாற் பெறப் படும். துறுவல் - செறிவு; அஃதீங்கு மரக்கொம்புகளின் உச்சிச் செறி வினை யுணர்த்திற்று. மிசை - மேல், இடம் நோக்கி 'இடை' யென்று பொருளுரைக்கப்பட்டது. ஆம்ஆம் வினைத்தொகை: ஆம் – நீர்; 'சுனை ஆம் அறப் புலர்தலின்' என்பது அகநானூறு (௧).

இப்பாட்டினுட் கூறப்படும் மலைவளன் மிக்க அழகுடையது.

பதிற்றுப்பத்து

மூலமும் உரையும்

[பண்டிதர். திரு. ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள்]

இரண்டாம் பத்து

(௧௨) வயவர் வீழ வாளரின் மயக்கி
யிடங்கவர் கடும்பி னரசுதலை பனிப்பக்
கடம்புமுத றடிந்த கடுஞ்சின வேந்தே
தாரணி யெருத்தின் வாரல் வள்ளுகி
ரரிமான் வழங்குஞ் சாரற் பிறமான்
றோடுகொ ளினநிரை நெஞ்சதிர்ந் தாங்கு
முரசுமுழங்கு நெடுநக ரரசுதுயி லீயாது
மாதிரம் பனிக்கு மறம்வீங்கு பல்புகழ்
கேட்டற் கினிதுநின் செல்வங் கேட்டொறுங்
காண்டல் விருப்பொடு கமழுங் குளவி
வாடாப் பைம்மயி ரிளைய வாடுநடை
யண்ணன் மழகளி றரிஞிமி றோப்புங்
கன்றுபுணர் பிடிய குன்றுபல நீந்தி
வந்தவ ணிறுத்த விரும்பே ரொக்கற்
றொல்பசி யுழந்த பழங்கண் வீழ
வெஃகுபோழ்ந் தறுத்த வாணிணக் கொழுங்குறை
மையூன் பெய்த வெண்ணெல் வெண்சோறு
நனையமை கள்ளின் றேறலொடு மாந்தி
நீர்ப்படு பருந்தி னிருஞ்சிற கன்ன
நிலந்தின் சிதாஅர் களைந்த பின்றை
நூலாக் கலிங்கம் வாலரைக் கொளீஇ
வணரிருங் கதுப்பின் வாங்கமை மென்றோள்
வசையின் மகளிர் வயங்கிழை யணிய
வமர்புமெய் யார்த்த சுற்றமொடு
நுகர்தற் கினிதுநின் பெருங்கலி மகிழ்வே.

துறையும் வண்ணமும் தூக்கும் அவை.

பெயர்—(அ) மறம்வீங்கு பல்புகழ்.

இ-ள். ௧-௫. வீரர்கள் மறிந்து வீழும்படி வாளின் பிணக்கத்தாலே கலக்கி நிலத்தினைக் கவராநின்ற சுற்றத்தினை யுடைய மாற்றரசுதலை நடுக்குறக் கடம்பின் அடியைத் துணித்த மிக்க சினத்தினையுடைய வேந்தே,

அரில்—பிணக்கம் (பின்னல்). வாளான் அரில்பட மயக்கி என்னலுமாம்.

௭—௯. நினது செல்வம் தார்போலும் புறமயிரைப் பொருந்திய கழுத்தினையும் நீளுதற் றன்மையுடைய கூரிய உகிரினையுமுடைய மடங்கல் வழங்குதலையுடைய மலைப் பக்கத்தே பிற விலங்குகளின் தொகுதியைக் கொண்ட இனமாகிய நிரை நெஞ்சு நடுங்கினாற்போல முரசு முழங்கும் நெடிய நகரின்கண் அரசுகள் துயிலாமல் திசை நடுங்குதற்குக் காரணமான மறப் புகழ் மற்றைப் புகழினும் மிக்க நின்பல் புகழும் கேட்டற்கு இனிதாயிருந்தது.

துயிலீயாது—வினைத்திரிசொல். மாதிரம் அரசு துயிலீயாது பனிக்கும் என இடத்து நிகழ் பொருளின் றொழில் இடத்தின்மேல் நின்றது. அரசர்க்குச் சிறந்த மறப்புகழ் மற்றைப் புகழினும் மிக்க பல்புகழ் என்று சிறப்பித்த வதனானே இதற்கு 'மறம்வீங்கு பல்புகழ்' என்று பெயராயிற்று. நின் செல்வம் பல்புகழ் கேட்டற்கு இனிது என்க; பல்புகழுடன் கூடிய செல்வம் என்றவாறு.

௯—௨௫. அச் செல்வத்தைக் கேட்குந்தோறும் நின்னைக் காணவேண்டுமென்னும் விருப்புடன், வாடாத பசுத்த மயிரினையும், இளைய வென்றி நடையினையும், தலைமையினையுமுடைய இளைய களிற்றியானை கமழுகின்ற காட்டு மல்லிகையால் அரியாகிய வண்டினை யோட்டும் கன்றுடன் கூடிய பெண் யானையினுடைய பல குன்றுகளைக் கடந்து வந்து அவ்விடத்தே தங்கிய கரிய பெரிய சுற்றத்தினது நெடுநாள் பட்டினி கிடந்தமையானுண்டாகிய பசியால் வருந்திய துன்பம் ஒழியும்படி, வாளினாற் பிளந்து துணிக்கப்பட்ட வெள்ளிய நிணத்தையுடைய கொழுவிய துண்டங்களாகிற ஆட்டிறைச்சியைப் பெய்து அடப்பட்ட வெண்ணெலரிசியானாய வெள்ளிய சோற்றை மகிழ்ச்சி பொருந்திய கள்ளின் தெளிவுடனே உண்டு, நீரிலே மூழ்கிய பருந்தின்

கரிய சிறகினையொத்த மண்ணு லரிக்கப்பட்ட பீறலாகிய துணியைக் களைந்த பின்பு பட்டினாற் செய்த தூய உடையினை அரையில் உடுத்தி, நெளிந்த கரிய கூந்தலையும், வளைந்த மூங்கிலையொக்கும் மெல்லிய தோளையும் உடைய பழிப்பில்லாத மகளிர் விளங்கிய அணியினை அணிய விரும்பி மெய்ம்மையைப் பொருந்திய சுற்றத்துடனே நுகர்தற்கு நினது பெரிய ஆரவாரத்தையுடைய ஓலக்கத்துச் செல்கின்ற மகிழ்ச்சி இனிதா யிருநத தென்க.

குன்று பல நீந்திப் பழங்கண் வீழ வெண்சோறு தேறலொடு மாந்தி வாலரைக் கொளீஇ வயங்கிழை யணிய இன்னணம் நுகர்தற்கினிது என முடிக்க. கேட்டொறு மென்பதற்கு அச் செல்வத்தை யென வருவிக்க. நூலாக் கலிங்க மென்றது ஒருவர் நூலாநூலாகிய பட்டு நூல் முதலாயவற்றாற் செய்த கலிங்க மென்றவாறு. நூலின் மேலதாய நூலாமை யென்னுந் தொழில் சினையொடு முதற்குள்ள ஒற்றுமைபற்றிக் கலிங்கத்தின்மேல் ஏற்றிக் கூறப்பட்டது. நூலாநூற் கலிங்கம் என்பான் நூலென் பதனைத் தொகுத்துக் கூறினுரென்பாரு முளர்.

• (௧) வேந்தே, (௬) நின் செல்வம் (௮) புகழ் (௯) கேட்டற் கினிது (௨௫) நின் பெருங்கலி மகிழ்வு நுகர்தற் கினிதெனவினை முடிவு செய்க.

இதனுல் அவன் வென்றிச் சிறப்பும், ஓலக்க விநோதச் சிறப்பும் உடன்கூறியவாறாயிற்று.

பெரியாரியல்பு*

[திரு. கோ. வைத்தியலிங்கப் பிள்ளையவர்கள்]

அளத்தற்கரிய பெரும் பொருள் வைப்பை அளந்து காட்டுதற்கு இவன் யார்? அவ்வாற்றல் சிறிதுமில்லேன், பெரிதுமஃதுடையன்போல அறிவே யுருவா யமைந்த பெரியா ரியல்பினை அறியாமையே பெரிது முடையேன் பேசத் துணிந்தது எனது கருத்தா னன்று. அப்பெற்றிய பெரியருரைத்த திருவாய்மொழிகளில் இலைமறை காய்போல அருகிக் கிடக்கும அவர தியல்

*இஃது இவ் வாசிரியருரைத்துள்ள ஆத்திசூடிச் சூத்திர விருத்தியிற் பெரியாரைத் துணைக்கொள் என்பதினின்று மெடுத்துக் கட்டுரை முறையின் வைத்தெழுதியது.

பெல்லாம் இயன்றவரை யான் பயின்றுணர்ந்தபடியேயாம். முற் சான்றோர் கருதியதல்லது யாவர் யாதொன்றனையும் யாமே இது கூறினு மென்பதற்கில்லை. எவ்வெவர் சொல்லும் எவ்வெப் பொருளும் அவ்வக்காலத் தான்றோர் கருத்தே; நீதி யும் நெறியும் நேர்பட நினைக்கின் ஆதியிற் பெரியோ ரமைத் தனவா மாதலின்.

> ஒன்று நவமா யுரைத்தில னெல்லாம்
> பண்டை மரபிற் பகர்ந்த படிசில
> ஞால வியல்பினை நல்லோர் நயக்கக்
> கால வமைதியிற் கண்டாங் குரைப்பல்
> ஈதினை யுணரா தென்னே யிதுவென
> யாதினை யாவர் கூறினுங் கூறுக.

காலமிடையிட உலகநடை மாறிமாறி வருதலியல்பு. ஒருகாலத் தொழுக்கம் பிறிதோர் காலத்திற் கேலாதவழிப் பண்டை யொழுக்கம் மாறிப் புதியதோர் ஒழுக்கம பயிலப்படும். அது வழுவன்று. மனுநூல் ஒன்று வடமொழியின் மன்னி வழங்கவும் பராசரர் தாமும் மிருதி நூலொன்றை வரைந்தார். அது மனுவை மறுத்ததன்று. காலவமைதிக் கேற்பப் புதுவது புகுத் தியோ பழையது கழித்தோ வழக்க வொழுக்கங்கள் பயிலப்பட வேண்டுமென்பது கருதியதா மென்க. இதுவுங் கருதியன்றே நன்னூன் முனிவரும் "பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையி னானே" என்றதூஉங் காண்க.

கடவுளுண்மை கூறுஞ் சமயங்கள் பலவும் வேறு வேறு கொள்கை யுடையனவேனுந் துணிந்த பொருண்முடி பொன் றனையே தம்முட் கொண்டு அமைந்தன வென்பது துணிபு. கொள்கை வேறுபாடல்லது பொருள் வேறுபாடின் றென்ப தாம். "நல்லாற்று னாடி யருளாள்க பல்லாற்றாற் றேரினு மஃதே துணை" என்பதனானு முணர்க. ஒன்றையொன் றொவ் வாத சமயநெறிகள் எல்லாவற்றானும் அவ் வருளேயல்லது பிறி தில்லை. நல்லாற்றானாடி யென்றதனாற் பல்லாற்றிற் சமயநெறி போல நல்லாரும் ஓர் பொருள் குறித்ததாமெனின்; ஈண்டு நல் லாறென்றது பல்லாற்றிற் றேறித் துணிந்த பொருண்முடி யொன்றனையுமே யென்க. "சமயாதீதப் பழம்பொருளை" என வும், "உலகச் சமயங்க ளொவ்வாத சாத்திரமாஞ் சலகக் கட லுளனாய்க் கிடந்து தடுமாறுங் கலக்கெடுத்துக் கழலிணைகள் தந்தருளுஞ் செயலைப் பரவிநாந் தெள்ளேணங் கொட்டாமோ" எனவும் வரும் உறுதி மொழிகளானு முணர்க. காலமுங் கேட்

பார் பருவமுங் கருதிச் சமயநெறி கூறியார் தம்முண் மாறுபட்டுக் கடவுட் பன்மை கூறி மயங்குவர். மயங்கினும் அது மயங்கியதன்று. அவரவர் அறிவாற்றல்கட் கேற்ப மக்களுள்ளங் குவிதற் கேதுவா மாகலின் மயங்குவதுபோலக் காட்டும் அவர் கூற்றுக்களெல்லா மிழுக்காமாறில்லை. அன்றி, அப் பெரியர் தாங் கொள்கையின் ஒருவரை யொருவர் முரண்பட்டு மறுத்தலுஞ் செய்வர்; கேட்பார்க்குத் தங்கொள்கை வலியுறற் பொருட்டென்க. பழையதே விழையும் அக்காலத்திற் கஃதொத்ததெனினும் புதியது புகுத்தலையே பெரிதும் பாராட்டும் இக்காலத் தக்கொள்கை யொவ்வாது. ஒவ்வாதாக; ஒற்றுமையே பெரிதும் பேணிச் சாதி சமயங்களின் வேறுபாட்டையும், மாறுபாட்டையும் ஒதுக்குவதாயிற் றிவ்வுலகம். ஆகவே; சாதி நிற்க; ஈண்டுச் சமயங்கள் பலவற்றையும் ஒப்பநோக்கி நன்கு ஆராய்தல் வேண்டும். ஆராய, இறுதியிற் பொரு ளொற்றுமையே உள்ளத்தினமையுமல்லது கொள்கை வேறுபாடு கொள்ளப்படா தொழியும். இங்கு அன்பர்கள் ஒருசார் பொதுங்காது நடுநின்று உய்த்துணர்க. இதற்குச் சம்பந்தமூர்த்தியுஞ் சங்கரகுருவும் பிறருமே சான்றாவார். அப் பெற்றியரெல்லாம் கட்டுரை முறையின் வைத்துக் கொள்கையின் வேறுபட்டிருப்பினும் பொருளொற்றுமை யுணர்ந்து ஒருவரோ டொருவர் இணங்கியும் நிற்பர். இதனை "வருணநன்குறு கௌணியன்சிறு மதலையம்புயல் பருகியே" எனச் சைவப பெரிய ரொருவரை ஏகான்மவாதப் பெரியோரொருவரும், அவ் வேகான்மவாத மற்றோர் பெரியர் "அருகா வடியேனைக்கா, புத்தா புலையேனைக்கா" என வேனைச் சமயப் பெரியர் சிலரையும் புகழ்ந்து வழிபட்டமையுங் கண்டு தெளிக. இச் சான்றினை மறுத்துக் கூறுவார் கூறுக. யானோ வேறு வேறு சமயந்தொறும் மாறி மாறி நின்று விளையாடும் பலசமயத் தொரு பொருளை ஆராய்ந்து அறிவானுயர்ந்த பெரியோரை மாறுபட்டுக் கருத மனமிசையேன். எவ்வகைப் பெரியாரையும் ஓரினத்தராகவே பேணும் பணியிற் புகுவேன். எனினும், படிமுறையுணர்த்தற்கு அவர்த மியல்பெல்லாம் பகுத்துக் காட்டுதலுஞ் செய்வேன். அவ்வளவி னமையாது பெரியா ரியல்பினை யுணர்தலான் எய்தும் பயனை வேண்டுவனவும் வேண்டாதனவுமாக விளக்கியுஞ் செல்வல். இவைதாம் யான் காலவமைதியிற் கண்ட ஞால வியல்பென்க. பெரியார்மேற் பொருளொற்றுமை நயங்காட்டி அவ்வச் சமயநூன் முடிபுகளை யானெடுத்து ஆண்டுகொண்டு செல்வதை ஆங்காங்குக் காண்க.

இனிப் பெரியார் பலதிறப் படுவர். திறம் என்றது ஈண்டுத் தன்மை யெனப்படும். "இருதிறனறிவுள" என்புழிப்போல

திறன் வகையுமாமெனின்; பலவென வொருசொன் முன்னின்று வகை யுணர்த்தலான் இதற்கது வேண்டாவென்க. அத் திறன் அவரவர்க்கு வழங்கும் பெயர்களான் விளங்கும். விளங்கப், பெரியாரியல்பு பகுத்துணர வேண்டுவதாயிற்று. பகுத்துணர, அவரவர் கொள்கையுந் துணிபும் புலனாகும். பெரியார் கொள்கை பலவேறுபடும். படினும், அவர்க்கெல்லாந் துணிபொன்றாய் வருதலிற் கொள்கை வேற்றுமைபற்றிப் பெரியாரை வேறு வைத்தெண்ணி மாறுபடலாகாது. "எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்—மெய்ப்பொருள் காண்ப தறிவு." அவர்க்கு யாதானும் நாடு அவர் நாடே. யாதானுமூர் அவரூரே யாம். எந்நாடும் எவ்வூரும் அன்னோரை உவக்கு மென்பதாம். வேறுபட்ட சார்பினர்க்கு மாறுபட்ட கொள்கை விலக்காகத் தோற்றினும் மாறுபடுதலை விலக்குதன் மரபாதலிற் றிறனென்னும் பெருமையே யெய்தும். அறிவுடையாராற் கொள்ளப்படுவது துணிபொன்றுமேயாம்.

ஈண்டு அவரியல்பெல்லாம் பொதுவியல், சிறப்பியல், பயனியல், ஒழிபியல் என நான்கியலில் வைத்துரைப்பாம். அவ்வியல்களின் இயைபை அவ்வவற்றி னிறுதியிற் காண்க. ஒவ்வோர் இயலும் பல பாகுபாடுகள் பெறும். ஈண்டுப் பாகுபாடென்றது சாதிவிசேடம் எனப்படும். நூற்குப் பாயிரம்போல விக் கட்டுரைக்கு இத்துணையும் முன்னுரை நிகழ்ந்து முடிந்தது. இனிப்

பொதுவியல்

என்பது பிண்டப் பொருட்டன்மை. அஃதீண்டுப் பெரியாரது பொதுமை பற்றிய வரலாறெனை விரியும். பெரியா ரியல்பென நின்ற இருமொழித் தொடரிற் பெரியாரென்னு முதன் மொழியின் வரலாறும், அம் முதனிலையாகியபண்படியிற் பிறந்த பெரியாரின் வரலாறுமென வரலாறு இருவகைப்படும். அவற்றுண் முதற் பண்படியாகிய

பெருமை

என்பது பெருந்தன்மை யெனப்படும். அது பண்பின் மேலதென்று முற் சொல்லப்பட்டது. பண்பென்றது ஈண்டுச் சிறப்புடைய மக்களுயிர்க்கு இன்றியமையாப் பண்பினையென்க. "அரம்போலுங் கூர்மையராயினும் மரம்போல்வார்—மக்கட் பண்பில்லாதவர்" என்பதனா னுணர்க. மக்களென்றது ஈண்டு நன்மக்களை; மக்கட் பண்பு நன்மக்கட்கே யுரிய பண்பு. அற்றாயிற், "றடவுங் கயவும் நளியும் பெருமை" என அஃறிணைச்சடப் பொருட் பெருமைக்கு உரிமை கூறினமையானும், தடக்கை,

கயவாய், பெருங்கையானை, நளிமலைநாடன் என முறையே
உதாரணம் வருகையானும், நிலத்தினும் பெரிதே வானினு
முயர்ந்தன்று - நீரினு மாரளவின்றே எனப் பெருமையை
வியந்துரைத்தலானும், தடங்கடல், தடங்கரை என ஆட்சி
பெறலானும் அஃது உயர்திணை மக்கட் பண்பிற்கே சிறக்குமா
றென்னை யெனின்; நன்று; இடம் இடத்தி னிகழ்பொருளென்
றிவற்றி னியைபான் வடிவு முதலியன அழிவுடைச் சடப்
பொருள்களையே சார்ந்து, அவை வளர வளரத் தாமும்
வளர்ந்து, அவை தேயத் தேயத் தாமும் தேய்ந்து, அவை அழி
யுங் கால் தாமும் அழியா நிற்கும். வடிவான் நில முதலியன
வும், அளவான் வேறுள்ளனவும் பெருமை யெய்தும். நிலம்
முதலியன மணி முதலிய பொருள் வகைகளானும் பெருமை
பெறலாமே யெனின், ஊழிதோறாழி நில முதலியன அழித
லுண்மையின் அவை யழியுங்கால் அவையிற்றுட் கிடந்த இவை
யும் அழிந்தொழியவே வேண்டும், இவைகட்குக் கூறிய பெரு
மை இடமிகுதியும் அளவு மிகுதியும், பொருள்சேர் வகையும்
உணர்த்துவதோர் குறியீடல்லது போற்றத்தகும் பெருமையன்
றென்க. இனி, அஃறிணைச் சடப்பொருள்களாகிய வித்து வேர்
முதலியவற்றினும் பண்பு காண்டுமெனின்; அப் பண்புகடாம்
சடமாகிய உடற்கேயல்லது சித்தாகிய உயிர்க்கு உறுதி பய
வாமை தெளிக. நிலன் முதலாகச் சொல்லப்படும் வடிவுடைச்
சடப் பொருள்கட்கும், வேறுள்ளனவாய அளவுடைப் பல
பொருள்கட்கும், ஓடதி முதலாயவற்றிற்கும் பண்பு கூறியது
ஒருபுடை யொற்றுமைபற்றிய உபசார மாத்திரையே யாதலிற்
பண்புப் பெருமை அவையிற்றிற்கேலாதென்பது காண்க. அல்
லதூஉம் சித்துப் பொருள் சடப் பொருள்களாகிய இருவகைப்
பொருட்கும் பெருமை பொது வுரிமையாகவும் உயிர்ப் பண்
பிற்கே அது சிறந்ததாமெனலும் பொருந்தும். இவ்வாறே வட
நூலாரும் பூசிக்கத் தக்கதெனத் தாதுப் பொருள் பயக்கும்
மகத் சத்தத்தைப் பெரும்பான்மை மெய்யுணர்வு மிக்க ஆன்றோர்
கட்கே விதந் துன்னுதல் காண்க.

இனிக், கராவாய்ப் பட்டுக் கடவுட் கூய கயத்தைப் போல
வும், ஊழி பல கண்ட சம்பாதி சடாயுக்களைப் போலவும்,
கொல்லா விரதம் பூண்ட நாரையே போலவும், விலங்குகளின்
பேரெல்லையாக மக்களுயிர்க்கு அடிநின்ற அனுமனாதிய குரக்
கினரைப் போலவும், மக்களொழிந்த ஏனையுயிர்களும் பெருமை
யெய்தினவே யெனின்; அவரெல்லாம் இறைவன்மாட் டன்
புடையராய்த் தவக்குறை முடிக்க வந்து பவக்குறை முடித்த
தவப்பெருந் தொண்டராகலின் அஃறிணையேனை விலங்கினங்

களில், புள்ளினங்களில் வைத்தெண்ணப்படாரென்க. அன்னோரை அஃறிணைக்குரிய விகுதிகளை யொழித்துக் கயேந்திரன், அநுமன், என்பனவாதி உயர்திணை விகுதிகளான் வழங்குதலு முணர்க. இஃது உயிர்ப் பண்பின் ஒழிபு. இதற்குப் பண்பைப் பண்பி மேலதாக்கிப் பெரியாரென வழங்குதலும், மற்றவை பெரியவையென அஃறிணையில் வைத்துப் போற்றப்படாமையுங் கண்டு தெளிக. "பெருமைக்கு மேனைச் சிறுமைக்குந் தத்தங்—கருமமே கட்டளைக் கல்" என்பதனானு முணர்க; பெருமையை இங்கே கருமத்தின்பாற் படுத்தியதனாற் கருமஞ் செய்தற்குரிய மக்களுயிர்க்கே அது சிறந்த தென்பதூஉம், கட்டளைக் கல் என்றதனான் அதன் உயர்வை வலியுறுத்திய படியுங் காண்க. உயிர்ப் பண்போ என்றும் அழியாது ஓரியல்பிற்றாய அறிவுப் பொருளாகிய உயிரையே சார்ந்து, அவ் வுயிரொடுந் தொடர்ந்து, அவ் வுயிர்க்கு உறுதியும் பயக்கும். உயிர்க்கு உறுதி பயப்பது கடவுட் பொருளே யல்லது உயிர்ப் பண்போ வெனின்; அறவாழி யந்தணன், மெய்ந்நெறி நன்மையன் என்றாற்போல அவர்தாம் பண்பு வடிவாயு மிருத்தலிற் பண்பும் உயிர்க்கு உறுதி பயக்குமெனல் இழுக்கா தென்க. மக்களுயிரைச் சார்ந்த பெருமைதானும் குண மாறுபாட்டாற் காலமிடையிட வொரோவழிக் குன்றலாமே யெனின்; சத்துவமன்னிய பண்புப் பெருமையே ஈண்டு ஆராயப் புகுந்தமையானும் அது குன்றுமேற் பண்பெனப் படாதாகலானும், சத்துவகுண முடையோரே பெரியாரெனப் படுதலானும், ஏனையிரண்டு முடன்வைத்து வழங்கப்படினும் அவையிற்றைக் குணமெனல் உபசாரமேயாக; என்றும் புலராதி யாணர்நாட் செல்லுகினும் நின்றலர்ந்து தேன்பிலிற்றும் நீர்மைத்தாகிய சத்துவப் பெருமைக்குக் குன்றுமியல்பு யாண்டைய தென்க. எனவே மக்கட் பண்பிற்கு யாண்டுந் தேய்வில்லையோ வெனின்; சுரையி னடங்கிய நீரும் சுரையோடு மிதத்தல்போல இடச் சேர்க்கையானும் பிறவானும் செங்கதிர்ச் சுடர்முன் இளங் கதிரொளி மழுங்குதல் போல மக்கட் பெருமை ஒளி மழுங்கு மாயினும் அஃதுடையாரை யெய்திய மாசு தீரவே பெருமை தன் ஒளி சிறந்து திகழும். இனிப்

பெருமைப் பொருளாமாறு

மக்களுயிர்க் கின்றியமையாது வேண்டப் படுவது நன்கு மதிப்பாகிய பெருந் தன்மையாம். 'மக்கட் சுட்டு' என்றாற் போலச் சுட்டெனவும் படும். "பிறராற் பெருஞ்சுட்டு வேண்டுவார்" என்பதனானு முணர்க. சுட்டு நன்கு மதிப்பு; நன்கு மதிப்பு யாவர்கண் நிகழும் அது பெருமை யென்றவாறாயிற்று. இப் பெற்றிய பெருமைதான் பலவாகப் பகுக்கப்படும்.

வகை

பெருமை:- பெருமித மின்மை, பணிவுடைமை, பண்புடைமை, சால்புடைமை, செயற்கருமை என வைந்துறுப்புக்களானும், ஐந்திறந்த பல வுறுப்புக்களானும் வைத்து எண்ணப்படும். உறுப்பெனினும் உடம்பெனினு மொக்கும். உறுப்பென்பது ஈண்டு மேலே கூறிய திறனை யென்க. எனவே பெருமை உறுப்பியும் முற்கூறிய ஐந்தும் ஐந்திறந்தன பலவும் உறுப்புமாயின. இவற்றை முறையே அவயவி, அவயவ மென்பர் வடநூலார். இவைதாம் அப் பெருமைக் கின்றியமையாது உடன் நிகழ்ந்து யாண்டும் ஒற்றுமை யுடைமையிற் காரணமு மென்பாரு முளர், அற்றாயிற்; றாயும் மகனும் போலவோ, பாலும் ஆடையும் போலவோ, நூலும் உடையும் போலவோ, மண்ணுங் குடமும் போலவோ வெனின்; தாயும் மகனும் போலவெனிற்; றாயும் மகனும் வேறு வேறு பிரிதலும், தாயிறக்க மகனிருத்தலுங் காண்டும். அதனாற் காரண மொழிந்து காரிய மின்றாம். இன்றாகப், பெருமை யின்றாய் முடியும். இனிப், பாலும் ஆடையும் போலவெனின்; பால் அடுதலாற் பாலெனல் மாறித் தயிர், வெண்ணெய், நெய் முதலியவாக வேறு வேறு பெயரும் உருவுங், குணமும் மணமும் பெறக்காண்டும். காணப், பெருமை யுறுப்புக்கள் மாறுபட்ட வழிப் பெருமை யின்றாம். இனி, நூலும் உடையும் போலவெனின்; நூல் சிதைய உடையென்னும் பெயா ஒழியக் காண்டும். காணப், பெருமை யுறுப்புக்கள் புலனாகா வண்ணம் புலனாகும் பெருமையு முண்டாங்கொல்! இனி, மண்ணுங் குடமும போலவெனின்; குடமுடைந்த வழிக் குடமென்னும பெயரொழிந்து மண்ணின் சிறப்புக் கெடக் காண்டும். காணப் பெருமை குன்றிய வழி முன் உயர்ந்து சிறந்த உறுப்புக்கள தியல்பு குன்றும். அதனாற் பெருமித மின்மை முதலியவற்றைப் பெருமைக்கு உறுப்பெனவே சால்புடைத் தென்க; பிற காரணங் கருதி ஒரோவழிப் பிறாண்டும் இவ் வுறுப்புக்கள் காரண காரியங்களாக இயைபெய்தி யெண்ணவும் படும். அவ் வியைபை ஆண்டாண்டுக் கண்டு செல்க. இனி; அவ் வுறுப்புக்களின் முதற்கண் நின்றது பெருமித மின்மை. எல்லாம் பகைமையாற் கெடுதலிற் பகைமையை விளைவித்துப் பெருமையை அழிக்கு மாதலானும்

பெருமிதமின்மை

பெருமை யுறுப்புக்களின் முதற்கண் வைக்கப்பட்டது. பெருமிதமின்மை பழிபாவங்களின் மடங்கி அடங்கி யொழுகலாந் தன்மை. அது தருக்கின்மை யெனவும் படும். "பெருமை

பெருமிதமின்மை'' என்பதனானு முணர்க. அடங்கி யொழுகல் என்பதாம். அடக்கம் பெருமித மின்மையின் குறியீ டெனப் படும். உலகிய னடாத்துத் திறன் கருதி மன்னுடை மன்றத் தோலைத் தூக்கினும் என்றாற் போல ஒரோவழித் தருக்கவேண் டுழியும் மெய்யுணர்வு பற்றித் தருக்கின்றி யொழுகலே பெரு மைக் கியல்பாமென்பார் உடம்பொடு புணர்த்திப் பெருமித மின்மையே பெருமையெனக் கூறினார் திருவள்ளுவர். தருக் குடைமை பகைமையையும் ஒருபாற் கோடுதலையும் எழுப்பு மாதலின் துலைநாவன்ன நடுநிலை யுய்க்குந் தருக்கின்மை பெரு மைக் கணியாவது நடுநிலை யுடையார்க்குப் பகையில்லை யென்ப தாம். ''நிலையினும்மேன் உயர்த்து நிறுப்பானு''மென நாலடிப் பெருமை யுண்மையின் இது பெருமித மன்றோவெனின்; நிலை யினு மென்றமையால் அது ஒழுக்கத்தின்பாற் படுமாதலானும், பெருமித மென்பது எல்லாரோடும் ஒப்ப நில்லாது பேரெல்லை யாகநிற்றல் என்பவாகலானும் உயர்த்து நிறுத்தல் வேறு, பெரு மிதம் வேறென்க. விரிக்கிற் பெருகும். இனிப,

பணிவுடைமை

''பணியுமாமென்றும் பெருமை'' என்றதனாற் பணிவுடை மை பெருமைக் குறுப்பாயிற்று. பணிவு-தாழ்வு; ஈண்டுத் தாழ் தலாவது குணங்களானிறைந்து யாவர்மாட்டும் எளிய செவ்விய ராதல். அஃது அரிய பண்புடைய செயலாகும்; எளிய செவ்வி உலகில் உயருந் தன்மையை எய்துவிக்கும். எத்துணை ஆற்ற லுடையாரேனும் அஃதிலாதார் போலத் தம்மைக் காட்டி யாவர்மாட்டும் பணிந் தொழுகலே யொருவர்க்குச் சீரிய பேற் றைத் தரும். வன்மையுள் வன்மை மடவார்ப் பொறை என்ப. மடவார்ப் பொறை மென்மையாய் வஞ்சமுமாமெனின் ஆகாது. பணிதல் அடங்குதல். அவ் வடக்கம் ஆற்றலுடையாரைக் கண் டுழி அஃதில்லாதார் அச்சத்தாற் பணிதல் போல்வதன்று; அது சிறுமையின்பாற் பட்டு அச்சத்தின் காரியமாகலின், ஆற்றலுள வழியும் ''எல்லார்க்கும் நன்றாம பணிதல்'' என்பது மேற் கொண்டு பணிதலே சிறப்புடைத்தாம். அச்சத்தாற் பணியும் பணிவோ பகைவர்க்குப் பெருமிதத்தை யுண்டாக்கும். ஆற்றற் பணிவோவெனின் பகைமையைப் பகையாதே ஒழிக்கும். எனவே பகைமைதான் ஆற்றலுடையாரிடத்துப் பணிவைக் கண்டுழி, நாணமிக்கு அடங்கு மென்பதாம். இது கருதியே ''ஆற்றுவாராற்றல் பணிதல் அது சான்றோர் மாற்றாரை மாற் றும் படை'' என்றது மென்க. ஆற்றற் பணிவுதான் இருந்துழி யிருந்து இடரும் புரியாது வாளா விருக்கவும் பகையொழியும்.

இதனை "மேருவை யுருவுமென்றால் விண்கடந் தேருமென்றாற் பாரினைப் பிளக்குமென்றாற் கடல்களைப் பருகுமென்றால் ஆருமே யவற்றினாற்ற லாற்றுமே வனந்தகோடி மேருவு மண்ணும் விண்ணும் கடல்களும் வேண்டுமன்றே" என் றிலங்கைவேந்தன் கலங்கினமையானுங் காண்க. கலங்கிப் பகைமை யொழிந்தா னிலையேயெனின்; அது போகூழ் குறுக்கிட நின்றபடி யென்க. இனிச்; சிற்றின மஞ்சும் பெருமை யென்பவே யெனின்; அஞ்சு தற்குப் பெருமையின் ஆற்றலின்மையை யுணர்த்திய தன்று; சிறுமையொடு பயிறற்கு மனம் மடங்குதலை யென்க. பணிந்தே யும் கீழ்களோடு பயிலாமை யுணர்க. இனி ஆற்றலுடையாரைக் கண்டுழித் தமக்கு அஃதின்மையாற் பணியும் பணிவுடைமை இழிவாதல் போல அதற்கு மாறாக ஆற்றலுள்வழிப் பணியும் பண்புடைமை உயர்வாகும். இதுவே இவ் விரண்டிற்குமுள்ள வேறுபாடாம். இப் பணிவுடைமை பெரும்பான்மை ஐம்பொறி களையும் பாவம் புகுதாமல் அடக்கலி னடங்கும். இனி எல்லாச் செயலும் எல்லாப் பொருளும் தத்தம் நிலையின்மைக்குச் சிறப் படைவ தியல்பு. பணிவுடைமை ஒன்றுமே 'தன்னை நிலைகலக்கிக் கீழிடுவானும்' "வலிதன்றே தாழுந்துலைக்கு" என்பனபோலத் தாழ்ந்து சிறப் பெய்துவதாம். இது கருதியே பரிமேலழகியார் பணியுமா மென்றும் பெருமை எனற்கு உயர்ந்தோர் தாழ்வார் தாழ்வா ருயர்வார் இஃதொரு விரோத மிருந்தவா றென்ன வென்று உரை தந்தது. அம்மி யாழ்தலுஞ் சுரை மிதத்தலுங் காண்டும். சொல்லுஞ் செயலு நினைவு மென்றிவை ஒத்தியலி னல்லது பணிவுடைமைக்குச் சிறப்பின்றாம். யார்க்குந் தாழ்ச்சி சொல்லாற் சொல்லும், நல்லன செய்தலாற் செயலும், அல்லன தவிர்தலா னெஞ்சும் என நின்ற மூன்றுறுப்புக்களும் இவ் விரண்டு செயல்களை யெய்துகின்றன. பணிவுடைமை எய்தவே அவர் சீரெல்லாந் தூற்றிச் சிறுமை புறங்காத்தலாற் புகழ்தலும், இகழாமையும், தூயன நினைந்து தீயன மறத்தலான் நலனுடை மையும், தீதின்மையும் நல்லன செய்து அல்லன தவிர்தலான் அறச்செய லுடைமையும், மறச்செய லின்மையும் உணரப்படும். இவற்றுட் சொல் இராமன்றான் றனக்கு ஆற்றாது தோற்று நின்ற இலங்கை வேந்தனை நீ முன் எம்மையும எமது ஆட்களை யும் அறியா திகழ்ந்தாய். நாம் அது மாட்டோம் என்பது தோன்ற "ஆளையா" எனக் கூறினமையாற் சொல்லிற் பணிவும், இன்றைக்கிவன் றோல்வி யெய்தினும் ஒருகால் நெறியுன்னித் திரும்பினும் திரும்பும், திரும்புமேல் உய்க, இன்றெனின் உலைக வென்பது கருதி "இன்று போய்ப் போர்க்கு நாளைவா' வென் றமையான் நினைவிற் பணிவும், பகைவன் நெஞ்சங் கலங்கி நின்றபொழுதே அவனைக் கொல்ல வாய்ப்பிருந்தும் கொல்லாது

அறத்தோடு நிற்றல்

"நல்கினன்" என்றமையாற் செயலிற் பணிவும், உணரக் கிடந்தமை உணர்ந்து கண்டுகொள்க. (தொடரும்)

நட்பு

[திரு. க. பா. இலக்ஷ்மீகாந்தனவர்கள்.]

நள் என்னும் பகுதியினடியாக பு என்னும் விகுதியுருபு பெற்ற நட்பு என்னுஞ் சொல் உலகில் தனித்த இருவர்களுக்கிடையிலோ, அல்லது பல மாந்தர்களின் நாப்பணோ நிகழும் மனநெகிழ்ச்சியாலுண்டாம் அன்பின் ஆக்கமாகிய ஓர் பண்பை உணர்த்துகிறது.

அன்பின் செயலாகிய நட்பின் திறம் உண்மையில் நுகர்ந்தவர்க்கேயன்றி ஏனையோர்க்கு எத்துணை விரிந்த கட்டுரையினைப் படித்தலினும் அவ்வளவாகப் புலப்படாது. நல்லாரிணக்கம், நட்பு, அன்பு ஆகியவைகள் மக்கட்குக் கடவுட் பேறுகளாம், என ஆங்கில ஆசிரியரொருவர்கூறுமாறு, நட்பென்னும் இவ்வரிய பண்பு, உயிர்களின் ஈடேற்றத்தின் பொருட்டு அன்பின் உருவமாகிய எல்லாம் வல்ல இறைவனின் திருவருள் கொடுத்தருளும் அறக் கருணையின்பாற்பட்டதாகும். இவ்வன்புச் செல்வத்தை இறைவன் மாந்தர்க் கருளியதின் திருவுளப் பான்மைதான் என்னையோவெனின், நம் மணிவாசகப் பெருமான் திருவாய் மலர்ந்தருளியவாறு "அவன் அருளாலே அவன்றாள் வணங்கி" உய்ய வேண்டியிருத்தலினா லென்க.

இனி நட்பின் இலக்கணமும், அதன் வகையும், கூடா நட்பை விலக்கி நன்னட்பை யடையும் ஆறும் சற்று வரைவாம்.

நட்பினர்களுள், ஒருவர் செல்லும் தீய வழியினின்றும், மற்றவர் வேண்டுமாயின் இடித்துக கூறி விலக்கியும், நன்னெறி கைக்கொளச் செய்தும், அவரது நலத்தில் கண்ணுங் கருத்துடனிருந்தும், வினைக்கீடாக இம்மையில் நுகர நேரும் அல்லல்களை உடனிருந்து உணர்ந்தும், உடல்களின் வேறுபாடேயன்றி, ஆருயிர்கள் ஒன்றுபட்டு, ஒத்த நெஞ்சத்தினராய், உணர்ச்சி வேறுபாடில்லாமல் அரிய ஒழுக்கநூல்களைக் கற்குந்தோறும் கற்குந்தோறும் நிகழும் மகிழ்ச்சி போன்று, தாம் ஒன்றுகூடிப் பயிலுந்தோறும் பயிலுந்தோறும் அன்பு வளர்ச்சியுறுமாறு பழகுதலே நன்னட்பின் இலக்கணமாம்.

பயண காலங்களில், இருப்புப்பாதை நிலையமேடையின் மேல் உலவும் அயலா ரொருவரிடமிருந்து அடைய விரும்பும் சிறு நலத்தின் பொருட்டுப் புன்னகை செய்து "முகநக நள்ளும்" நட்பும், தீய னொருவனுடைய உடலுதவி தமக் கொருகால் உதவுமென் றெண்ணி, தன்னலங் கருதி, அவன் தன் தீய வழியைச் செப்பி நல்வழிப்படுத்தாது, அவனுக்குரிய விருப்பு மொழி பேசிவரும் போலி நட்பும் உண்மை நட்பாகா.

'நெஞ்சத்தக நக நட்டு' உடுக்கை யிழந்தவன் கைபோ லாங்கே இடுக்கண் களைவதல்லவோ, உண்மை நட்பு.

முறையல்லாததிற் றலையிடுகின்றவரும், முதுகாட்டில் காக்கை யுகக்கும் பிணம், என்பதற் கிணங்க, தமக்குள் தம தீச் செயல்கள் முற்றுப்பெற நட்புப் பூண்பதுமுண்டு. ஆயின் இவரது தீ நட்பு நாளடைவில் நசித்துத் தம்மைக் காப்பாற்றியவர்களை இம்மையிற் கடுஞ்சிறை யிருத்தியும் மறுமையில் நரகம் புகுவித்தும் இடர்படுத்தும் நன்றியறிதலை யுடையது.

உடல் வளர்ச்சியின் தோற்றத்தையும், உடையின் வனப்பையும், உரையாடும ஆற்றலையுமே பெரிதும் மதித்து, அவர்களது ஒழுக்கமற்ற இழிசெயலின் தன்மையை உணராது நல்லோர் என ஏமாற்றமடைந்து நட்புக்கொண்டு, பின்னை நாள் அத் தீ நட்பின் இடருழந்து வருந்துவோரும் உளர். இன்னோரும் சேர்க்கைக் குற்றத்தின பயனை மேற்போந்த தீயோரின் இருக்கையிடத் தருகமர வேண்டியவர்களே.

'தீயோர் குணங்கள் உரைப்பதுவுந் தீதே'யாகலின், நம 'செல்வி'யின் அரிய பக்கங்களை அவமாக்காது, "(முன்) ஆய்தலால், ஒருவரிடத்து (தீ) நட்புறேல், உறின் அவர் செய் புன்மையும் பழியும் புணர்ந்திரு பயனும போக்குவ துண்மை. புத்திரனே" என்னும் விநாயக புராணச் செய்யுளை நெஞ்சத் திருத்தி மேல் ஆராய்வோம்.

எவரிடத்து நட்புக் கொளினும், அஃது குற்றமுடைத் தெனத் தோன்றுங் காலம் அந் நட்பினின்று விலகுத லியலாதோ வெனில், எளிதாகக் கூடாவாம். "பாம்பொடு பழகினும் பிரிதல் இன்மையாம்"; பழக்கத்தினாலான வலிமை நம் முயற்சியினும மேற்பட்டு மேலெழு மாற்றலுடையது. ஆதலின் நோய் வாய்ப்பட்டு மருந்துண்பதினும், நலி நணுகாவண்ணம், தடுப்பதே நனி சிறந்தது.

இந் நந்நட்பு, புணர்ச்சி உணர்ச்சி என இரு வகைத்தாம்.

நட்பினர், உடனிருந்து அளவளாவிப் பயிலுங் கேண்மையே புணர்ச்சி நட்பாம்.

ஒருவரை நட்பினராய்க் கொள்ளுமுன், அவர் பழிப்பில்லா நற்குடிப் பிறப்பாளரா எனவும், நல்லியல் புடையவரா எனவும், குறையிலான் கடவுளன்றி மனிதரிற் பிழையிலாதார் இலர் ஆதலின், நட்பான பின்பு நல்ல அறிவுரைகளாற் சீர்திருத்தக் கூடியதும் மக்களியற்கையான சிறிய குற்றமுமேயன்றிஏனையபழிப் பற்றவரா எனவும், நல்லினச் சேர்க்கையும், நல்லொழுக்கமும் உடையவரா எனவுமாராய்ந்தும், நல்லவர்கள் வாயிலாக அவரது மதிப்புணர்ந்தும், மேற்போந்த ஆராய்ச்சியில், விரும்பத் தக்க தேர்ச்சி யடைவாராயின் அன்னவரது நட்பை, பொருட் செலவிட்டேனும் எவ்வகையினும் கொள்ளுதல் முதன்மை. ஏனெனில், "முத்திக்கு வித்தாகும் மூதறிஞர் பெருநட்பு" ஆதலின்.

இத்தகைய நன்மையும், உண்மையுந் தலைமையும் வாய்ந்த புணர்ச்சித் தோழமை, எளிய குசேலனை இறும்பூ தெய்துவித் தற்குரிய வளவு இம்மையில் செல்வந்தனுக்கியும், மறுமையில் உயர் நிலையை அடைவித்து அறிவின் அன்பின் செயலாயுள்ள நட்பின் திறம்தான் என்னென் றியம்புவது. "பொன்னில்லான் பூமியில்லான் புந்தியில்லா னயினும் என்னில்லான் ஆவன் அவன் இருந்தவர் தம் நட்புளனேல்".

இனி உணர்ச்சி நட்பென்பது யாது? இவ்வுலகில் உண்மையை உள்ளவாறறிய அவாவுறும் மக்கட்பேற்றை யடைந்தவர் எவரும், யாதாமொருவரோ பலரோ, எந்நாட்டின ராயினும், எம்மதத்தின ராயினும், அன்பு உருவமாய், அறிஞராய், ஒழுக்கம் கண்ணோட்டம், அன்பு, இன்சொல்முதலிய அரிய இயல்பிற் குறையுளாய் விளங்கி அரனடி தொழுவோராயின், அவர்மீது அன்பு செலுத்துகிறோம். அன்னாரின் பெருந் தகைமையைக் கருதுந் தோறும், கருதுந் தோறும் நம் இதயத்தில் அன்பு ஊற்றெடுத் தோடுகிறது. அவரது நலத்தைக் குறித்து வெகு ஊக்கத்துடன் கவலையுறுகிறோம். அவரது இன்ப துன்பங் களை நம்மதெனவே எண்ணுகின்றோம. சுருங்கச் சொல்லின், அவருக்கும் நமக்கும் இடையில் புணர்ந்து பழகி யறியாவிடினும், உணர்ச்சி நட்புத் தவழ்கிறது. இஃதே உணர்ச்சி நட்பாம்.

> "புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
> நட்பாங் கிழமை தரும்"

அல்லவா?

முந்தை நாள் செங்கோலோச்சிய சோழ மன்னனுக்கும், அவன் காலத்து வதிந்த பிசிராந்தையார் என்னும் துறவி ஒருவருக்கும் இடையே, கற்றாரைக் கற்றாரே காமுறுவராதலின், அரிய உணர்ச்சிநட்பு, அரியணை இவரும் அரையனெனவும், அரனடி தொழும் அன்பினரெனவும், பொருள் நிலைமையின் வேறுபாடற்றுத் தவழ்ந்தது எனவும் அவ்விரு வுணர்ச்சி நட்பினருக்கும் தமக்குள் புணர்ந்து உசாவ விருப்பமுற்றிருந் தும் சமயம் வாய்க்காது பன்னாள் கழிந்ததெனவும், சோழன் தன் ஆட்சி நீக்கி வடக்கிருக்கச் செல்லுங்கால், அரண்மனையி லுள்ளாரை விளித்து, தன்னைத் தன் உணர்ச்சி நண்பன் பிசிராந் தையார் காண வருவரெனவும், அவருக்குத் தன் இருப்பிடம் தெரிவித் தனுப்புமாறும், அவர் வருமுன்னமே தான் சமாதி கூடப்பெறின் தன் பக்கலிலேயே பிசிராந்தையாருக்கும் ஒரு கல் லறை செப்பனிட்டு வைக்கும்படியும் கட்டளையிட்டு வடக்கிருக் கச்சென்றவன் சிலகாலம் தாழ்ந்து பின்னர்ச் சமாதி யடைந்தன னெனவும், சோழன் வாழ்நாள் முடிவுற்றதென, நெடுந் தூரத் திருந்து அறிந்த பிசிராந்தையார் மிகவும் விரைவாகப் போந்து அரசன் கோயிலையணுகிச் செய்தி யுணர்ந்து, தன் நண்பனின் சமாதியை நண்ணி, பக்கலில் தனக்கென ஒரு கல்லறை சமைத் திருப்பதையும் வியந்தும், வருந்தியும் சோழனது உணர்ச்சி நட்பையுன்னிக் கசிந்துருகி 'நண்ப, உயிரும் உணர்ச்சியும் நின் னுடையவோடு ஒன்றிய நின் நண்பனுக்கு உன் கல்லறையிலேயே இடங்கிடைக்கலாகாதா'வென, அற்றன்று, சோழன் கிடத்தப் பெற்றிருக்கும் சமாதி நடுவே பிளந்து பிசிராந்தையாரைச் சோழன் வரவேற்றது போன்றதெனவும் நிகழ்த்தா நிற்கும் பண்டை நாள் வரலாறு ஒன்று போற்றுகிறது.

என்னே! அப் பெரியாரிடை நிகழ்ந்த உணர்ச்சி நட்பு, நிலம் புரக்கும் மன்னனுக்கும், வனமுறையும் துறவிக்கும் இடையே நிகழ்ந்த அன்பின் இழையாலாய நட்பென்னும் கயிற்றின் பிணிப்பு வலிமையை மின்சாரத்தினும் பன்மடங்கு மிகுதி யெனின் எவ்வாறு மிகையாகும்.

மேற்போந்த வியப்பான நிகழ்ச்சியைக் காணநேர்ந்த கண் ணகனாரென்னும் பெருந்தகை ஒருவர், அவ் விருவரது நட்பை வியந்து

"பொன்னும் துகிரும் முத்தும்
மன்னியமா மலைபயந்த
காமரு மணியும் இடைபடச்
சேய ஆயினும் தொடை புணர்ந்து

அருவிளை நன்கலம் அமைக்குங் காலை
ஒருவழித் தோன்றி யாங்கு என்றும்
சான்றோர் சான்றோர் பாலர் ஆப
சாலார் சாலார் பாலரா குபவே"

எனப் போற்றினர் எனவும் அறிகிறோம்.

நிகழ் கால எடுத்துக் காட்டாக, நந்நாட்டவரும், நல்லோரும், தாய்நாட்டு மதம் மொழி முதலியவற்றிற் பற்றுள்ளவரும், அன்புருவமானவரும், "இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயஞ் செய்துவிடல்" என்னும் நந்தமிழ் வேதத்தின் கொள்கையை ஒழுக்கத்தி லுடையவருமாகிய அரும் பண்பு உறையுளாம் மோகன்தாஸ் கரீம்சந் காந்தி அடிகளிடம் பலர் கற்றோரும் பாமரரும் கொண்டுள்ள நண்பு உணர்ச்சி நட்பின் பகுதியின்பாற்பட்டதன்றோ? ஆம் உணர்ச்சி நட்பேயாம்.

ஆன்ற நல்லீர்! மேற்போந்த ஆராய்ச்சியில், அன்பின் செயலாகிய நட்பு மக்களாய யாவரும் எளிதில் அடையக்கூடிய ஒப்பற்ற தெய்வப்பேறு எனவும், அதை யாவரும் எப்பொழுதும் போற்றி அதன் பயனைத் துய்ப்பதே சாலச் சிறந்ததெனவும் பெற்றாம். நந்நட்பைப் பேணி, நல்லறம் வளர்த்து, நாரியோர்பாகனின் நல்லருள்பெற் றுய்வோமாக. தமிழுலகம் பிழை பொறுக்க.

குழலினிதுயாழினிதென்பர்

[திரு. M. S. பூரணலிங்கம் பிள்ளையவர்கள் B. A. L. T.]

'குழலினிது யாழினிதென்பர் தம் மக்கள் மழலைச்சொற் கேளாதவர்' என்றார் திருவள்ளுவ நாயனார். குழல் யாது? யாழ் யாது? இவற்றினை விரித்துரைப்பாம். குழலென்பது வங்கியம். அது மூங்கில், சந்தனம், வெண்கலம், செங்காலி, கருங்காலி இவற்றாலாக்கப்பட்டது.

"ஓங்கிய மூங்கில், உயர்சாந்து வெண்கலமே
பாங்குறு செங்காலி கருங்காலி—பூங்குழலாய்
கண்ணன் உவந்த குழைக்கிவைகள் ஆமென்றார்
பண்ணமைந்த நூல்வல்லோர் பார்த்து"

இவற்றுள் மூங்கிலிற் செய்வது உத்தமமென்றும், வெண்கலக் குழல் மத்திமமென்றும், ஏனை அதமமென்றும், மூங்கிலாற்

செய்த குழல் பொழுது செய்யுமென்றும், வெண்கலக் குழல் வலியதா யிருக்குமென்றும், மரக்குழ லெப்பொழுது மொத்து நிற்குமென்றும் கூறுவர் குழலோர். கழைக்குழல் இளமை முதுமையில்லாத பெரிய மரத்தை வெட்டி அதனை நிழலிலே யாறவைத்து ஓர்யாண்டு சென்றபின் திருகுதல் பிளத்தல் போழ்ந்துபடுத லில்லாததைப் பொறுக்கி அதனாற் செய்யப் படுவது; அது வங்கியமாம். இதன் நீளம் இருபது விரலென்றும், சுற்றளவு நாலரை விரலென்றும் இலக்கணங் கூறுவர். இருபது விரலில் தூபமுகத்தில் இரண்டு விரலின்பின் ஏழங்குலம் விட்டுக் கடைசியில் இரண்டு விரல் நீக்கிப் பின் நடுவினின்ற ஒன்பது விரலினும் எட்டுத் துளையிடப்படும். இவற்றுள் ஒன்று முத்திரை யென்று கழித்து நீக்கி மீதப்பட்ட ஏழினும் ஏழு விரல்வைத்து ஊதப்படும். ஒரு துளைக்கும் மற்றொரு துளைக்கும் நடுவே ஒரு விரலகல மிருக்கும். ஏழு விரலாவன இடக்கையில் பெருவிரலுஞ் சிறுவிரலு நீக்கி மற்றை மூன்று விரலும் வலக்கையிற் பெருவிர லொழிந்த நான்கு விரலுமாம். இத் துளைகளில் இசை பிறக்கும். ஏழிசையாவன சட்கம், இடபம், காந்தாரம், மத்திமம், பஞ்சமம், தைவதம், நிடாத மெனப்படும். இவற்றிற்கு எழுத்துக்கள் ச, ரி, க, ம, ப, த, நி என்பனவாம்.

யாழ் வீணையெனும் இசைக்கருவி. அது நான்கு வகைப் படும். அவை பேரியாழ், மகரயாழ், சகோடயாழ், செங்கோட் டியாழ் என்பன. பெருங்கலம் அல்லது பேரியாழிற்கு ஆயிர முதலாக இருபத்தொரு நரம்பும், மகரயாழிற்குப் பதினேழும், சகோடத்திற்குப் பதின்மூன்றும், செங்கோட்டிற்கு ஏழுமுள.

> "ஆயிர நரம்பிற் றதியா ழாகு
> மேனை யுறுப்பு மொப்பன கொளலே
> பத்த ரளவுங் கோட்டின தளவும்
> ஒத்த வென்ப விருமூன் றிரட்டி (12)
> வணர்சா ணொழித்தென வைத்தனர் புலவர்"

> "தலமுத லூழியிற் றானவர் தருக்கறப்
> புலமக ளாளர் புரிநரம் பாயிரம்
> வலிபெறத் தொடுத்த வாக்கமை பேரியாழ்"

யாழாசிரியன் நாரதன், 'நாரதன் வீணை நயந்தெரி பாடல்'. யாழில் வல்லோர் கந்தருவர். மக்களுள் யாழில் வல்லவர் யாழ்ப் பாணரெனப்படுவர். திருஞானசம்பந்தரின் தோழராகிய திரு நீலகண்டர் யாழில் வல்லார். பாலறாவாயரின் பதிகங்களை

யாழிலமைத்துப் பாடிய இவர் திருஞானசம்பந்தரின் தருமபுரப் பதிகத்தை யாழிலமைத்துப் பாடவியலாமையால் அதனை முரிக்க முயன்றனரென்றும், அப் பதிகம் யாழ்முரி, யாழ்மூரி யென்ற பெயரால் வழங்கி வருகிறதென்றும் அறியத்தகும். அப் பதிகத்தின் தலைச்செய்யுள் இதுவாகும்.

மாதர்ம டப்பிடியும், மட,வன்னமு மன்னதோர்
　நடை யுடைம், மலை மக ளேணயென மகிழ்வர்,
பூதவி னப்படைநின், றிசை, பாஅடவு மாஅடுவ
　ரவர் படர் சடைந் நெடு, முடியதொர் புனலர்,
வேதமொ டேழிசைபா, டுவ,ராஅழ்கடல் வெண்டிரை,
　யிரைந் நுரை கரை பொரு, துவிம்மி நின்றயலே
தாதவிழ் புன்னைதயங் கும லர்ச்சிறை வண்டறை
　யெழில் பொழில் குயில் பயில், தருமபு ரம்பதியே.

இவ்வாறு பலவகை யாழினின்று பிறக்கும் இசைகளினும் இனியது ஒருவர் தாம்பெற்ற ஆண் பெண் மக்களின் நிரம்பாமென் சொல்லாதலின் அதனைச் செவிமடுத் தின்புற்றவர் குழலொலியையும் யாழினிசையையும் பொருட் படுத்தார், என்றுசெந்நாப் போதார் மகப் பேரின்பத்தை வற்புறுத்தியுள்ளார். பிள்ளைகளைப் பெறுதவர்களே இவ் விசைக் கருவிகளைப் பெருமைப் படுத்துவர் என்பது அவரது கருத்தாகும்.

தற்கால வியக்கத்திற் சமயங்களின் பாடு

[திரு. அ. வரதநஞ்சைய பிள்ளையவர்கள்]

நம் அருமைச் 'செல்வி' ஆசிரியர் கட்டளைப்படி, சைவ சித்தாந்த நுணுக்கங்களுட்டோர்ந்த ஒன்றை வரையலாமென இறகு பற்றிப் புக்கேனுக, ஆங்கே, சினம்பொங்கிய முகமும் செயிர்த்து நோக்கிய நோக்கமுமுடையதாய்ப் பொள்ளெனப் புறத்தே குதித்து எனது கையை எழுதுகோலோடு நகராமற் பிடித்துக் கொண்டு "ஏட! அறிவுனக்குளதோ? ஓர் அரண்மனை தீப்பட்டெரியும்போது அதனைக் கருதாமல் அம் மனையின் அழகு நோக்கி மகிழ்வுறும் முழுமகனும் நினக்கு இணையாகான்! இக்காலப் புதிய இயக்கத்தில் ஆடிக்காற்றுப் பூளைபோற் பறக்கும் சமயங்களின் சமயந் தெரியாத நீ சமயநுட்பமா காணப் புக்காய்? நின் கருத்தை மாற்றி நான் கூறுவதையே எழுதுக. எழுதாது மறுப்பாயேல் இதோ" என என் கன்னங்களில் ஒச்

சிப் புடைத்தற்கு ஊக்கிய கையோடு நின்ற ஓர் எண்ணத்திற்கு, அஞ்சி அதன்வழி ஒழுகலானேன்.

நம் நாட்டின் உயர்வற வுயர்ந்த பண்டைக்கால நாகரீகப் பெருமையைக் காட்டும் சரித்திரங்களைக் கற்றும், "இந்நாட்டின் பழைய நாகரீகப் பெருக்கின்முன் இக்காலத்து ஏனை நாடுகளின் நாகரிகமனைத்தும் நேற்று வந்த ராய்டர் தந்தியை ஒக்கும்" என மேற்புலத்தாரொருவர், பல்கலைகளைப் பன்மொழிகளிற் பன்னாட் பயின்று கண்ட உண்மையை மறையா தியம்பிய மாற்றங் கேட்டும், அத்தகைப் பெருந்திரு நாட்டின் தற்கால நிலைமை இவ்வாறுயிற்றே, எனக் கண்ணீர் வடிக்கும் துன்பமுங் கூடத் தோன்றுவண்ணம், ஒருவரை ஒருவர் அறைகூவி அமர்க் கழைக்கும் பேரொலிகள், இருபக்கத்து நின்றும் மாறி மாறி நம் இருசெவித் தொளைகளையும் நிரப்புகின்றனவன்றோ? அவற்றுள் ஒன்று:—

"நாகரிகம் முற்ற முதிர்ந்த மேன்மக்கள்பாற் காணப்படும் சிறப்பியல்களாகவும், நாகரிகம் தோன்றுதற்கு இன்றியமையா அடிப்படைகளாகவும் விளங்கும். தாய்நாட்டன்பு, தம்மொழிப் பற்று, தமது சமயத்து உறுதிப்பாடு என்னும் இம் மூன்றனுள், இக் காலத்து நாம் எதனை உடையேமா யிருக்கின்றோம்? அரிச் சந்திரன் இறுதியாகப் பொய் ஒன்று கூறி மீட்சி பெறும்படிக் கோசிகனால் மிக நெருக்கப்பட்ட ஞான்று கூறியதாகவுள்ள செய்யுளிற் சில கூட்டிக் குறைத்துப்

*பதியிழந்தனம் [தாய்மொழிப் பற்றொடும்] படைத்த
நிதியிழந்தன மினிநமக் குளதென நினைக்குங்
கதி [யொன்றேயுள ததனையு மிழந்திடக் காலம்
புதிது தோன்றிடில் மதிப்பவோ பிறரெமைப் பொருட்டாய்]

எனக் கண்ணீர்விட் டழத்தான் வேண்டும். ஆவோ, அமெரிக்கா நாட்டில் அறிவின் மேம்பட்ட பல்லாயிரஞ் சமயக் கணக்கர் முன்னிலையில், வென்றிக்கொடி நாட்டி மெய்ம்மையென நாட்டிய ஓர் சமயமோ இன்று சில எம் மினத்தவரால் கால் சாய்க் கப்பட்டு அழிவுறப் போகின்றது! படைப்புக் காலமுதல் தோன்றி மறைந்த எத்துணையோ சமயங்களைக் கண்டு நகைத்து, என்றும் ஒரே பெற்றித்தாய்த் தன்னிலை சிறிதும் மாறாது, முற் போந்தவும் இனித் தோன்ற விருப்பவுமாய பலப்பல சமயங்

---

*[ ] இக் குறிக்குட்பட்டன பழஞ் செய்யுட்கிடை புதிது புகுத்தியவை.

களும், தான் கண்டறுதியிட்ட பொருளின் எல்லைக்கு மேல் செல்லற் கியலாத முடிந்த வுண்மையின் முழுப் பேருருவோடு, எவ்வெந் நெறிச் சமயங்களையும் தன்கட் காட்டித் தழுவி அமைத்து, அல்லவென மருது நல்லவென்று தாங்கும் தண்ணளி பூண்டதும்; எம் முன்னோர்கள், தம் மனைவி மக்கள், உயிர் உடல் பொருள் முதலியவற்றைக்கூடப் பொருட் படுத்தாது காப்பாற்றி யுய்த்த கடவுட்டன்மை மிக்கதும்; அன்னோர்க்கு நற்கதி தந்து நலக்கந் தீர்த்ததும்; அவர்கள் சந்ததி உரிமையோடு எந் தவப்பயனைப் பிறவியோடு வந்த பெருமை மிக்கதுமாகிய எம் சமயமா பொய்ப் புழுகென்று ஒரு சிலரால் எள்ளப்படுவது: சமயப் பல்கலை தண்டமிழ்ப் புலனொடு சான்ற அமைதியாளர்காள்! அருங்கலை வடித்த நாவலர்காள்!! சமயத்தின் பொருட்டுச் சமயத்துக் குதவாத நுங்கள் கலைபயில் தெளிவும் கட்டுரை வன்மையும் இருந்தென்? ஒழிந்தென்? நாத்திகம் பேசி நாத் தழும்பேறும் ஒரு சிலரைத் தக்காங்குக் கூறித் திருத்தும் சொல்வன்மை நுங்கட் கில்லைகொல்லோ? நாட்கு நாள் இவ் வியக்கம் கொடிய விடம்போற் பரவி அற்ப சொற்பச் சமயப் பற்றையும் அடியோ டொழிக்கக் காண்ப துங்கட்கு அறமோ? ஆண்மையோ? புகழோ? பெருமையோ? உண்மைச் சமய உறுதிப் பற்று நுங்கட் குண்டெனின் இன்னே எழுமின்! இன்றெனின் ஒழிமின்!'' எனனும் பெருங்குறற் கூச்சல்.

மற்றையதோ:—''என்னே கொடுமை! எத்துணை வன்கண்மை!! கடவுட்குப் பொறுக்குமா? அறிவுமிக்க மனிதர்க் குரிய செயலாமா? அரசரிங் கில்லைகொல்லோ? ஆன்றவ ரில்லை கொல்லோ? உரைசெயுந் தருமநதானு மில்லைகொல்''? நம்மைப் போலவே எல்லா வுரிமையும அடைதற்கென இநநாட்டுப் பழங் குடி வழியிற் றோன்றிய பலவாயிர மக்கள், நமது பாழ்த்த தன்னலப்பேயின் வஞ்சச் செயலால், தாழ்ந்தவர் தீண்டப்படாதோர், எந் நாட்டினு மில்லாத கொடிதினுங் கொடிய வழக்கத்தால் கீழ்ப்படுத்தப்பட்டு, சொல்லாத ஒனறே குறையாகப் பற்பல துன்பங்களையும் நம்மவரியற்ற என்றென்றும் நமக்கவர் மீளா அடிமைகளாகி நமது தயையினாலேயே மூச்சுவிடத் தக்கவர்களாகவிருந்து, உண்டி, உடை, குடிக்கும் நீர், உறைவிடம் முதலியவை தக்கவாறும போதிய அளவுக்கும் கிடைக்கப் பெறு ராகி விலங்கினும் கேடாய்த் தோன்றிய நாள் தொட்டு இறக்கும் வரையும் இன்பமே அறியாத் துன்பத் துணைவர்களாய் மெலிந்து வருந்தி ஆற்றமாட்டாது, கடற்றுறைமுகத்துப் புறப்படுங் கப்பலை விழித்தகண் இமையாது நோக்கிக்கொண்டு, நொடிக்கு நொடி மிகுந்துவரும் ஆற்றின் புதுப் புனல்போல் மிக்குத்

திரண்டு வேற்றுநாட்டு வெள்ளையர்க் காட்பட்டேனும் உய்யலா மெனச் செல்லும் காட்சி, நோக்கும் உங்கள் கண்களைச் சுட்டெரிக்கவில்லையா? நுங்கள் கன்மனத்தைச் சுக்குச் சுக்காய் நறுக்க வில்லையா? ஆகுமா இத்தனை அறக்கேடு? போகுமா அவர்கள் புலம்பு கண்ணீர் வீண்? நீங்கள் என் நினைந் தெது செய்யினும் சற்றேனும் இனித்தாழேம். இதோ அவர்கட்கு அஞ்சலளித்து ஆதரவுகூற முற்படுகின்றேம். அவர்கள் தீண்டாமை உடையார்தாமோ? கடவுள் கோவிலில் அருகே நிறுத்திக் கேட்கின்றேம். அத் தெய்வம், அவர்கள் தீண்டப்படாதோரேயாம் எனச் செப்புமோ பார்க்கலாம், எம்மொடு வருவர் வம்மின்! தடுப்போர் தடுங்கள்! பார்ப்பனர் செய்த படுமோசம் இவ்வளவும். அவர்கள் தொந்தி சரிய என்றென்றும் நம்மை எய்த்துப் பிடுங்கித் தின்னவன்றோ புராணங்களையும் நூற்களையும் சமயங்களையும் சடங்குகளையும் சாதிகளையும் வகுத்து நம்மைப் பிரித்து வைத்தனர். நம் வீட்டில் நடக்கும் திவசம், திங்கள், மணவினை பிறவினைகள் எல்லாம் அவர்களன்றி நடப்பதில்லை. ஒவ்வொன்றிற்கும் அரிசி மூட்டையும், பணப்பையும் அவிழ்த்தவிழ்த்துக் கொட்டி நன்றிகெட்ட அவர்களுக்கு நாடோறும் கொடுத்தே நாம் வறுமையுற்றுக் கொட்டாவி விடலாயிற்று. போனது போய்த் தொலைக. இனியாவது நம் சுயமரியாதையைக் கைக்கொள்வீரோ? என்ன பாழ்த்த சமயம்! புராணங்களத்தனையும் காற்று மூட்டை, அந்தோ! கடவுள்பேராலும் சமயங்களின் பேராலும் வஞ்சித்து நெற்றி வேர்வை நிலத்துச் சிந்தப் பாடுபட்டுத் தேடிய நம் பணத்தையெல்லாம் பார்ப்பனப் பூதம் பறிததுக்கொண் டோடுகின்றதே! எந்த நாட்டில் உண்டு இந்த வீண் நினைப்பு? பகல் கொள்ளை! பெரும் மோசம்! உயிர் உடலைவிட்டு இச் செய்கைகளால் வீட்டுலகு புகுமாம்! அதற்குப் பார்ப்பனரே தரகர்களாவராம்!! அறிவு, மானம, ஆண்மை, உண்மை நம்பிக்கை, நாட்டின் நல விருப்பம், முதலான நற்குண முள்ளவர்க ளெல்லாம் நம்பக்கல் சேர்மின்! அல்லாத பதடிகள் அகன்றொழிக" எனக் காளமுகிலிடுங் குரலினும் கடிய கூக்குரல்.

யாம், இவ் விருசார்பாரின் அமர்க் கூச்சல்களைச் சில தடவை அமர்ந்து கேட்டு ஆற்றியும் ஆற்றா வுள்ளம் திறப்ப, இவ் விருகுரலோசைக்கும் இடைக் குரலோசை எப்பக்கத்தினின்றேனும் எழுகின்றதாவென உற்றுக் கேட்டேம். ஆங்காங்கே சில பல கூவிளிகள் செவியுற்றன. எமது பங்குக்கும் ஒரு குரல் எழுப்ப அவாத் தூண்டிற்று. ஆதலின் அதனைப் பின் வருங் காப்பொடு வெளிப்படுப்பே மாயினேம்.

யாண்டும், உண்மை யுணரும் கருத்தால் வாதிடுவோர் பிறர் கூறும் கருத்துக்கள் தமக்குப் பொருந்தாவாயின், இனிய மொழியில் பொருட்டோடு அவற்றின் ஏலாமையைக் கிளந்தோதுதலே தகுதி. ஒருகால், தென்றல் முற்றிப் பெருங்காற்றாகு மெனத் தெரிந்தால் "அவ்வளவி லவன்மகிழ்க" என்னும் நியாயம் விடுத்து நீங்குவதே நன்று. இங்ஙனமின்றித் தாங்கொண்டவைகள் முற்றும தக்கவைகளே என விடாப் பிடியாய் நிறுவிப் பிறன்கோளை ஒன்றொழியாது மறுத்துத் தம் தந்தையா ரிழந்த அரசுரிமையை மீட்டார்போல இறுமாந்து வெற்றிப் பதாகை நாட்டி வீம்பு பெருக்கலும், அவர் எமக்குத் தோற்றனர் எனக் கூறி அவரை வாய் தநதவாறு வைதலும், நல்லோரியற்கையாகா. நீதியின் மெய்ந்நிலைதான் யாது? ஒருவர் கருத்துக்கு மிக நன்றெனப் படுவது அவ்வாறே பிறர்க்குந் தோன்றித் தீர வேண்டுமென நியதியுண்டோ? இல்லையே. ஆதலால், தன் கருத்தொடு முரண்படு மொருவரைச் சீறிச் சினக்கும் ஒருவன், தனது முகத்தைப் போலவே பிறனொருவனுக்கு மில்லையென இவனை வைது வசைகூறும் ஒரு மூழுமகனையே ஒப்பாவான்.

எதிரியின் கூற்றில் அரிய பல உண்மைகள், தான் முன் உணராதவைகளாக வெளிப்பட்டுத் தான் முன்பு நன்றெனக் கொண்ட கோட்பாடுகளை மாற்றலுங் கூடும். அன்றிப் பிறன் கோளும தன்கோளும் தமமில் ஒரு நிகரனவாய் ஒன்றையொன்று வெல்லும் வலியற 'அதுவு மொக்கும்' என நிற்பினும் நிற்கும். மற்று, மெய்யே புகல்வோன் சொல்வன்மை யின்மையிற் றோல்வி பெறுதலும், முழுப் பொய்யையே முடித்துத் திரட்டிக் காட்டும ஒருவன் பேசுந் திறமையால் வென்றி பெற்றோனாதலும் காண்கின்றோம். தொடக்கத்தே தலைமட்டுங் கொண்ட சினத்தோடு வாதிடப் புக்காருள்ளம் பிறர் சொல்லும் உண்மை உறுதிகளை எளிதில் மேற்கொள்ள முடியாது. உண்மையை உள்ளததில் ஏற்றுக்கொண்ட போதும் வெளிக்குத் தோல்வி யுற்றோமெனப் பிறர் நகைப்பரே என்னும் மானமும் பிடித்ததை விடாது சாதிக்கச் செய்யும். இவ்வகைப் பல ஏதங்கள், வாதிப்போரபால் நிகழ்வ தியல்பாகலின், அறிவாளிகள், எதிரி எந்த நோக்கததால் மறுக்கின்றான் என்பதை முதற்கண் அறிந்துகோடல் வேண்டும். அவற்கு உண்மை தெரியும விருப்பமுண்டெனின், விளக்கித் தன் கோளை மொழியலாம். தன் கோள் நாட்டி வென்றி பெறுதலை மேற்கொண் டிருப்பதுகாணின் பொய வென்றியை அவர்க்கேயாக்கி மெய்ம்மை வென்றியைத் தோல்விப் போால்தான் மேற்கோடலே தக்கது. "கற்

றன கல்லார் செவிமாட்டிக் கையுறாஉம், குற்றம் தமதே" அல்லவா?

இவ் வுட்கோளோடு யாம் கூறும் புல்லொலியில் இரு சாரினரும் கொள்ளுவ கொண்டு தள்ளுவ தள்ளல் வேண்டுமேயன்றி எள்ளல் முறையன்றாம். இதுவே எம் செப்புக்குத் தலைக் காப்பாவது. புதிய இயக்கத்தின் ஒலியே ஏனையோரை முன்னம் எழுப்புவதாகலின், அதனையே முதற்கண் ஏற்றுக்கொண்டு, அவர் கொள்கைகளின் நலந் தீங்குகளை ஆராய்வோம்.

சுயமரியாதை இயக்கமென்பது, அப் பெயரானே தமது மரியாதையைத் தாமே பேணிக்கொள்வது; தம்மைப்போன்ற ஒரு சிலர்க்கு முன்போலத் தாழ்ந்து சிறுமையுற்று நில்லாது, இறுமாப்பும் வீரமுமுடையராக நம் நாட்டு மக்களைச் சமமாக நோக்குவது. பின்னிடைந்தோரை முன்னேற்றுவது முதலிய நற் கொள்கைகளை மேற்கோண்டதென அறியக் கிடக்கின்றது. இந் நோக்கம், இக்காலத்துக் கேற்றதுதானோ? அறிவுடையார் எவரைக் கேட்பினும், ஆம் ஆம் இன்றியமையாததே. தம்மை உயர் குலத்தினரெனத் தாமே மதித்துக்கொண்டு சிறிதேனும் ஏனையோரும் மனிதர்கள்தாம் என்று மதியாது சில பலகுறும்பர்கள் பிறரைத் தாழ்ந்தோரென வாட்டி ஆட்டும் கொடுமை இக்காலத்தின் மிகுந்து நிற்பதற்கேற்ப இவ் வியக்கம் தோன்றியது நற்காலத்தின் அறிகுறியேயாம். என உரைப்பார்கள். "வளம்பட வேண்டாதார் யார்?" யாருமில்லை. வாழ்நாள் முற்றும் அடிமைச் சிறை புகுந்து, தாழ்ந்தோ ரென்னும் இழிவு சுமத்தற்கு யாரே ஒருப்படுவார்? இங்ஙனம் நன்றே புரியவந்த இவ் வியக்கத்திற்கு ஆங்காங்குப் பொறுக்கமுடியாத மறுப்புகள் பொங்கி வளர்வானேன்? அதன் எண்ணம் நன்றேயாயினும், செய்யும் வழியறிந்து செய்யப்படவில்லை யெனவே தெரிகின்றது. அதனானே பொதுமக்கள் அதனை உவந் தேற்கின்றார்களில்லை என ஓராற்றால் இதனை நிறுத்திக்கொண்டு, இவ் வியக்கத்தின் வரலாறுகளையும் கோட்பாடுகளையும் பற்றி நோக்குவோம். இவ் வியக்கத் தலைவர் வரலாற்று நெறிகொண்டு நோக்கின், இவ் வியக்கம், காங்கிரஸின் பேரன், திராவிட இயக்கத்தின் மைந்தன், ஒத்துழையா இயக்கத்தின் துணைவன் எனத் தெளியலாம். இத் துறைகளில் தேயத்தொண்டு பன்னாட்புரிந்து, மெய் போன்ற வெறும் பொய்யினும், முன் செல்வதுபோலக் காட்டிப் பின் பதுங்கும் மோசத்திலும், துணை வருவதாகச் சுட்டிச் சமயத்தில் வஞ்சிக்கும் சூதிலும், அடிபட்டு வெறுத்து நாட்கு நாள் தோன்றி வளர்ந்த நல்லெண்ணங்களின் உருவமாக இவ்

வியக்கம் வெளிப்பட்டதாகும். உயர்குலத்தோரின் வீண் பெருமையையும், தாழ்குலத்தினரின் ஆற்றொணாத் துன்பத்தையும், நடுநின்று நன்கு கண்ட உருக்கமான இரக்கமே இவ் வியக்கத்தைத் தட்டி எழுப்பிவிட் டிருக்கின்றது. இவை முற்றும் உண்மையே என இவ் வியக்கத்தை நல்வரவுகூறி வரவேற்க நம்நாடு கடமைப் பட்டிருக்கின்றது. ஆயினும், மக்களின் மனப்பாங்குகளை ஒட்டி அவர்களின் உடன்பாட்டைத் தழுவி இப் பெருஞ் செயல்களை நாளடைவில் நிறைவேற்றாமல் பதட்டமாகவும் பிறர் நோக்கத்தைப் பொருட் படுத்தாமலும் எது தம்மால் ஒறுக்கப் படாததோ? எது தம் நோக்கத்திற் கிடையூறு செய்யாமல் துணை நிற்பதோ? எது அறிவாளிகளால் மிகவும் அன்போடு தொன்று தொட்டுப் பேணப்படுவதோ? அதன்மீது அம்பு தொடுக்கும் வழியல்லா வழிச் செல்வதாலுமே, இஃது வெறுப்புத் தருவதாகின்றது. இவ் வுண்மையைப் பரக்க வுணர்த்துவாம்.

நம் நண்பர்கள் தீண்டாதோரை உயர்த்துதற்கு அவர்களைக் கோவில்களில் கடவுட் படிமத்துக் கருகாமையில் ஈர்த்துச் செல்வதே வழியெனத் துணிந்தனர். அதனால் புதிதாய் உயர்வோர்க்கும் தமக்கும் ஏனையருக்கும் எவ்வளவு வருத்தமும் வம்பு வழக்கும் வெறுப்பும் பகையும் விளைகின்ற தென்பதைக் கருணையே மிகுந்து கள்ளமற்ற அவர்கள் மனம் உணராமற் போகின்றது. நாம் சின்னாட்கு முன் நேரிற் கேட்டும் கண்டும் அறிந்த ஓர் நிகழ்ச்சியை ஈண்டுக் குறிக்கின்றோம். ஓர் சைவக் கோவிலில் இத் தீண்டாமேனியர் சிலர், இவ் வியக்கத்தினர் சிலரால் வலுவந்தமாக நுழைக்கப்பட்டனர். உடனே கோவில் காக்கும் பூணூல் படைகளும் அதைச் சார்ந்த சில கணங்களும் அவர்களைப் பிடர்பிடித்து வெளியே தூக்குவராயினர். உள்ளே செலுத்துவோர் சிலரும் வெளியே துரத்துவோர் பலருமாகத் தீண்டாதார் பட்டபாடு தெய்வத்துக்கு வெளிச்சமாம். பின்னர், செந்தலைப்புலிகளி னுதவியால், ஒருவாறு அமைதியோடு மீட்கப் பட்டனர். தங்கள் இயக்கத்தின் கடமைகளை நிறைவேற்றிவிட்டு நம்மவர் சென்றனர். மறுநாள் அக்கம் பக்கத்துள்ள ஊரார் கூட்டங்கூடிச் சொன்னவர் சொன்னால் கேட்பவர் எப்படி இப்படிச் செய்யலாம், கீழ்க்குலக் கடையர்களுக்கு இத்தனைத் துணிச்சலா? நல்லதாகட்டும் நன்றாய்ப் புடைத்து இனி எப்பிறப்பிலும் இவ்வாறு செய்யவொட்டாது நற்புத்தி புகட்டுகிறோம் என ஆளுக்கொரு கம்புகொண்டு சினம்பொங்க அவர் சேரியை முற்றுகையிட்டனர். பலவாறு கெஞ்சிக்கொண்டும் இனி அவ்வண்ணம் உயிர் போயினும் செய்யோமென உறுதி கூறியும் சில பலர் ஆற்றிக் கலகம் நடவாது போக்கினர். குடிகள்

சினந்து இக் கீழ்மக்களை நாம் கூலி கொடுத்து வேலைக் கமர்த்தவாவது பண்ணை வேலையில் சேர்த்துக்கொள்ளவாவது அவர்கட்கு எவ்வகை உதவியும் செய்யவாவது கூடாதெனக் கட்டுப்பாடு செய்துகொண்டு ஏற்கெனவே ஆள் வைத்திருந்தவர்களையும் வீட்டுக் கனுப்பிவிட்டனர். அதன்மேல், அவர்கள் காலில் விழுந்து கெஞ்சி முன்செய்த குற்றம் இனி ஓர்நாளும் செய்வதில்லையென முறையிட்டுக் கொண்டதன்மேல் ஒருவாறு சீற்றம் மாறினர். என்ன துன்பம் நேர்ந்தது பாருங்கள்! இப்படியா தீண்டாரை உயர்த்திச் சிறப்புச் செய்வது? கடவுளை அருகிற் சென்று கைகுவியாக் குறை ஒன்றுதான் அவர்க்குள்ளது போலும்! ஐயோ! உண்ண உணவும், உடுக்க நல்ல வுடையும், இருக்கத் தூய்மையான குடிலும், பருகற்கேற்ற நீரும் கிடையாத பஞ்சைகளாய்த் தவிக்கும் அவர்கள் பிழைத்தற்கேற்ற கைத்தொழில் காட்டி, கல்வி பயிற்றி அறிவைப் பெருக்கி நல்லுடை தரித்து வெளியே உலாவச்செய்து மக்கள்குழாத்தில் இழிவுதீரப் பயில்வித்துப் பிறர்க்கு அன்னோர் ஏழைமையை உருக்கமாக எடுத்துக்கூறி அவர்கள் வல்லென்ற நெஞ்சைப் பிளந்து மெல்லியதாக்கிப் பெரும்பான்மையோர் தழுவுதல் கொண்டு பின் கடவுட் கணுக்கராக்கின் இத்தகைய இன்னல்கள் விளையாது தமது நோக்கம் இனிது முற்றுமன்றோ? உட்கார்ந்து படுப்பதை விட்டு நின்ற நிலையிற் படுத்தால் தீங்கே நேரிடும்; நம் நோக்கம், நெடுநாட் பழகிய பாழ்த்த பழக்கத்தில் ஊடுருவிச் சென்றுறச் சில ஆண்டுகளேனும் வேண்டும். நமக் கவர்கள்பாற் றோன்றும் கருணைபோலப் பிறமக்களுள்ளத்தும் பெருக்க வழி தேடவேண்டும். 'எமது கொள்கை நன்று இன்னே யாவரும் மேற்கொண்மின்' என்று சட்டமிட்டால் அது நிலையுறாது என்பதைத் தான் கண்டுகொண்டோமே, பின்னும் இவ்வகையில் முயலலாமோ? நியாயத்தலத்திற்குச் சென்று வாதிட்டு வம்பளந்தோ ஒரு நன்னோக்கத்தை மதிப்பேற்றுவது? மக்கட் கிணங்காத ஒன்றை வற்புறுத்தி இடை நுழைத்தால் மாண்புறுமோ? பர்டோலியா வரி வசூலுக்கு ஏகாதிபத்தியத் துரைத்தனம் எத்தனை முயற்சித்துப் பாடுபட்டது! சிறுபான்மையராகிய நம் கொள்கையை ஏன்று கொள்ளாமைக்காக அவர்கள் முற்றிய பழக்கத்தோடன்றி அவர்கள்மேற் சினப்பது நன்றாகுமா?

> "நன்றாற்ற லுள்ளுந் தவறுண் டவரவர்
> பண்பறிந் தாற்றாக் கடை."

என நம் தெய்வத் திருமறை கூறுகின்றது. "நன்மையே புரியப் பட்டாலும் அவரவர் பண்புக்கும் தகுதிக்கும் ஏற்பவறிந்து செய்யாவிடத்துக் குற்றமே தரும்'' என்பதிதன் கருத்து.

தீண்டாரை உயர்த்தும் மெய்க் கருணையாளர்காள்! மேற் கூறியவாறு, அவர்களின் உடற்றூய்மை, அறிவுத்தூய்மை, உடல்நலம், உறுதி, பொருளீட்டும்நெறி முதலியவை பெருகும் வழியில் நீங்கள் இயற்றும் உதவியே அவர்கட்கு மிகவும் இக் காலத்துக்கு வேண்டிய நல்லுதவியாகும். இதனை யாவரும் எதிர்ப்பாரிலர். உங்கட்குத் துணைநின் றாக்குவர். நம் தமிழக மும் நும்மை வாழ்த்திப் பல்லாண்டு பாடுவதாம். இஃது நிற்க.

இரண்டாம் முறையாக நம் நண்பர்கள் பார்ப்பனரை வையும் வகையைக் குறித்துச் சில பேசுவோம். வடதிசை நின் றும் போந்து நம் பண்டைப் பெருமையைக் கலக்கி, நம்மைப் பல சூழ்ச்சிகளானும் பொய் புனைந்த நூற்களானும் என்றென் றும் தமது நெருக்கமாய்ப் பின்னி மாயவலையிற் சிக்குண்டு சிறையுற்றுக் கிடக்குமாறு செய்துவிட்டதும், தமது குலமே உயர்ந்ததெனத் நம் வாயானுங் கூறுவித்து ஒரு குலத்துக் கொரு நீதி கூறும் நூலையும் அரசருக் கேற்பித்து நடாத்தியதும் நினைக் குந்தோறும் நெஞ்சை யெரிக்கும் ஆறா நெருப்பேயாம் என்ப தில் தடையில்லை. அதுகொண்டு இனிச் செயக் கிடந்தது என்? எத்தனை பக்கம் திருப்பித் திருப்பி எழுதினும் இதைத் தவிர வேறு என்ன கூறுவோம். இங்ஙனம் மோசம் செய்த அவர்கள் முன்னோரும், நம்பி ஏமாந்த நமது முன்னோரும் சென்றுவிட்ட னர். நாமும் விழித்துக் கொண்டோம்; அவர்களும் அடங்கிக் கொண்டார்கள். நாம் நன்றாய் விழிக்காவிடத்தில் அவர்கள் தம் சொக்குப் பொடியைத் தூவாதிருப்பார்களா? ஏமாந்தனம் என் றுணர்ந்த பின்னர் ஏமாற்றினவரைத் திட்டிக்கொண்டே ஏமா றுவதைவிட ஏமாறாமல் நாம் விழிப்போடிருப்பது சிறந்த தன்றோ? இத்துணை நாள் பல படலங்களாகப் பார்ப்பனரை வசைமொழிந்த நம் புராணம், இத்துடன் முற்றுப்பெறுக. இனி எழும் புராணம் நம்மவர் கண் விழிக்கவும், பார்ப்பன மயக்க முறுதிருக்கவும் திருப்பள்ளி எழுச்சியும், எச்சரிக்கையும் பாடு வனவாக!

"என்னைப் பிறன் இவ்விவ்வாறு நன்றாய் ஏய்த்தனன் என அவற்றைப் பலபட வருணித்துக் கூறுவது, கூறுவோனுடைய உறுதியற்ற அறிவின் சிறுமையை, ஆராய்ச்சி பெறாத இழிதகை மையை வருணிப்பதாக முடியும்," என்பது நமது கோட்பாடு. தற்காலத்து வழக்கிலில்லாத, மநுநூல், நமக்கு ஒரு சிலம்பி நூலே; உள்ளீடில்லாத புராணப் பொய்க் குப்பைகள், நம் அறிவுள்ள கண்கட்கு முன் அணுகுவனவுமாகா. நம் வீட்டு நல் வினை பிறவினைகள் நம்மவராலே நடாத்தத் தகுவனவென்றால்

அல்லவென்பார் யாருமில்லை. ஆகவே, பார்ப்பன மாயம் பஞ்சாய்ப் பறப்பதற்குத் தடையுண்டோ?

தயரதராமன் ஆரியனேயாக, மற்றையோனேயாக, விண்டு அம்சம் எனக்கொண்டு வணங்குவோரை நாம் ஏன் குறை கூறவேண்டும்! தேயத் தொண்டுக்கும் அதற்கும் இயைபென்ன? ராமன் கடவுளா? அல்லவா? என ஆய்ந்து முடிவு கட்டித் தருமாறு நம்மை வேண்டிக்கொண்டார் யார்? நமக்கதில் அத்துணை கூர்த்த நோக்கம் எதற்கு? தாழ்ந்தோரை உயர்த்தும் வழியில் உயர்த்தக் கடவேம். நம் நலத்துக்குத் தீங்கு தரும் பொருந்தாத புராணங்களைப் பாராட்டாது புறக்கணிப்பேம். காவியரசம் நன்கு நிறைந்த பெருநூலின் போக்கைத் தலைகீழாகக் காட்டி வாய் வலியால் மாறுபட்டு ஊர்வம்பு பேசுவதில் பயன் யாது? இது வீண் வேலையே!

சமயங்களைத் திட்டி நொறுக்குவானேன்! மக்களின் மூட எண்ணங்கட்குத் தீர்வு சமயங்களை ஒறுப்பதோ? சமயங்களின் உட்பொதிந்த அரிய பெரிய சிறந்த உண்மைகளை ஆழ்ந்து கண்டு அவை நம் கொள்கையைத் தாங்கும் முழு வயிரத் தூண்களாதலறியாது, நம்மவர்களின் சமய நூலை மேற்கோளாகக் காட்டிக் காட்டி இடித்திடித்து நம்மவர் அஞ்சி நடக்க ஆணை தராது, சமயத்தைப் புரட்டவா நாம் தண்டு கூட்டுவது? ஒரு கையில் கூரிய வாளும் ஒரு கையில் வேறோர் சமய நூலுங் காட்டி எது வேண்டுமென அச்சந் தோன்ற முயன்ற நாளினும் அஞ்சாது ஆண்மை விளங்க நின்ற ஒரு பெருஞ் சமயமா சிலர் இழிப் புரையினால் மாசூட்டப் பெறும்? நமது சமயத்தைக் கொல்வதற்கோ நாம் பிறந்து கற்றுப் பெருமையுற்றது? அமெரிக்கா நாட்டில் வென்றிக் கொடியூடு விளங்கித் திகழ்ந்த ஒரு சமயமா? உண்மையுணர்தல் அறியா நம்மால் துணித்து வீழ்த்தற்குரியது? நண்பர்களே! இனியேனும் நம் சமயம் என்ன சாற்றுகின்றது? அதன்மீது சுமத்தப்பட்ட அழுக்குக் குப்பைகள் எவை? நாம் சமயமென உணர்ந்த தவறுபட்ட ஊழல்கள் எவை? என நன்குணர வேண்டாமா?

வைணவத்தையும் அதன் ஆழ்வார்களையும் பழித்தபோது சைவ அன்பர்கள் மனமகிழ்ந்தனராம். ஆங்கே "சைவத்தையும் சைவசமயகுரவர்களையும் யாம் பழித்துச் சைவர் கண் கலக்கமும் மகிழ்நது காண்பேம்" என ஒரு பத்திரிகையில் என் நாட்டத்திற் கெதிர்ப்பட்டது. சைவத்தையும் வைணவத்தையும் பழிப்பதா நம் நண்பர்கள் கொள்கை? அதனாலோ நாடு நாட்குநாள் வறுமையுறுவது? நாடு பொருள்வளம் பெறுதற்கு இவ்விரு

சமயமுமாதடுத்து நிற்கின்றனர்? அந்தோ இதற்குக் காரணம் பத்திரிகைத் தலைவரல்லர், நாமறிவோம்.! தமது கல்விப்பெருமையைப் புது வழியிற் காட்டி உலகை ஈடேற்றுவிக்கும் சில நண்பர்களின் கைவேலை. ஒருவருள்ளத்தையும் தாக்காமல் தங்கள் பொதுநலவிருப்பத்தை அவரவர் மனத்தே நுழைப்பித்தால் எவ்வளவு அழகாக எத்துணை புகழ்ச்சியோடு இவ்வியக்கம் முட்டின்றி நடந்து இதுவரை தோன்றிய இயக்கங்களினும் சாலப் பயன்தந்து தழைப்பிக்குமே! எடுக்கும்போதே சமயத்தின் மீது பாய்வது கொண்டு இதன் நன்மையை அறியாமக்கள் திடுக்குற்று அஞ்சி ஒதுங்கி முறுமுறுக்கும்படிச் செய்வது நன்றன்றே என வருந்துகின்றேம். இத்துடன் சுயமரியாதை இயக்கத்தின் மீது செலுத்திய எமது நோக்கத்தை நிறுத்தி அதற்கெதிர் கூறும் சார்பாக மீட்போம். (தொடரும்)

சௌரமாத சாந்திரமாத விளக்கம்

அல்லது

சூரியமாத சந்திரமாத விளக்கம்

[திரு. இ. மு. சுப்பிரமணிய பிள்ளையவர்கள்]

மாதம் சௌரமாதம், சாந்திரமாதம் என இருவகைப்படும்.
சௌரமாதம் சைவர்களுக்குரியது.
சாந்திரமாதம் சுமார்த்தப் பிராமணர்களுக்குரியது.

சௌரமாதம்.	சாந்திரமாதம்.
1. சூரியன் ஒரு இராசியை அனுபவிக்கும் காலம் சௌரமாதம்.	1. ஒரு அமாவாசை கழித்த பிரதமைமுதல் மற்றொரு அமாவாசை முடியவுள்ள முப்பது திதிகொண்ட காலம் சாந்திரமாதம்.
2. சூரியன் பன்னிரண்டு இராசிகளையும் சுற்றி வருங் காலம் சௌரமான ஆண்டு; அது 365¼ தினங்கொண்டது.	2. சந்திரனுடைய சஞ்சாரத்தினால் உண்டாகிய பன்னிரண்டு அமாவாசை கொண்ட காலம் சாந்திரமான ஆண்டு; அது சற்று ஏறக்குறைய 355-நாள்.

சூரிய வீதியிலுள்ள 27 நட்சத்திரங்கள் இராசி ஒன்றுக்கு $2\frac{1}{4}$ நட்சத்திரவீதம் 12 இராசிகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு இராசியிலும் சூரியன் இருக்கும்போது ஒவ்வொரு மாதமாகப் பன்னிரண்டு மாதங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இவ்விதமாக நமது முன்னோர்கள் மாதங்களைச் சூரியனை வைத்துக் கணக்கிட்டிருப்பதால் அவைகளில் மாறுபாடு எக்காலத்திலும் ஏற்படப்போவதில்லை. ஆனால் சுமார்த்தப் பிராமணர்களோ தங்கள் மாதங்களைச் சந்திரனுடைய வளர்ச்சி தளர்ச்சியைவைத்து அதாவது ஒரு அமாவாசையின் மறுநாளிலிருந்து மற்றொரு அமாவாசைமுடிய ஒரு மாதமாகக் கணக்கிட்டிருப்பதால் வருடம் ஒன்றுக்குச்சுமார் 11 தினங்கள் வரை குறைந்து, சுமார் இரண்டு வருடம் எட்டு மாதங்களுக்கு (அதாவது 32 மாதங்களுக்கு) ஒரு தடவை ஒரு மாதம் வித்தியாசப்படுகிறது. அதாவது அந்தச் சாந்திரவருடத்தில் 13 அமாவாசைகள் வரும். அதில் ஒரே சௌரமாதத்தில் முதலிலும் கடைசியிலுமாக இரண்டு அமாவாசைகள் வரும். அப்பொழுது அதிகமாக ஒரு மாதம் ஏற்படும். அந்த மாதத்தில் முதல் சுக்கிலப் பிரதமை முதல் உள்ள சாந்திர மாதத்தை அதிக மாதம் அல்லது போய்மாதம் என்றும், கடைசி சுக்கிலப்பிரதமை முதல் உள்ள சாந்திர மாதத்தை நிஜமாதமென்றும் வழங்குவர். உதாரணமாக:- இவ்விபவ வருடத்தில் ஆடிமீ முதல் தேதியில் ஒரு அமாவாசையும் 30-ம் தேதியில் ஒரு அமாவாசையும் ஏற்பட்டது. அதில் முதல் சுக்கிலப் பிரதமை முதல் உள்ள சாந்திரமாதத்தை அதிக சிராவணமாதம் என்றும் கடைசியிலுள்ள சுக்கிலப் பிரதமை முதல் உள்ள சாந்திர மாதத்தை நிஜசிராவண மாதம் என்றும் எல்லாப் பஞ்சாங்கங்களிலும் குறிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். சிராவணம என்ற சாந்திரமானப் பெயர் சௌரமானத்தில் ஆவணி எனப் பெயர்பெறும். சௌரமான ஆடிமாதத்தில் அமாவாசை கழிந்த பிரதமை முதல் சாந்திரமான (ஆவணி மாதமாகிய) சிராவணமாதம் ஆரம்பமாகிச் சௌரமான ஆவணி மாத அமாவாசையோடு முடிவாகிறது.

இவ்விதம் சாந்திரமானிகளாகிய சுமார்த்தப்பிராமணர்கள் அதிகப்படும் மாதத்தை அதிகமாதம் என்று தள்ளிவிட்டுச் சௌரமாதத்துக்குச்சரியாகச் சாந்திர மாதத்தையும் இரண்டு வருடம் எட்டு மாதங்களுக்குப்பின் ஒரு சௌரமாதத்தில் இரண்டு அமாவாசை ஏற்படுகிற காலத்தில் சரிப்படுத்திக்கொள்ளுகிறார்கள். அக்காலங்களில் தான் அவர்கள் சைவவிரதஉற்சவங்களைத் தங்கள் சாந்திரமானக் கொள்கைக்கு ஏற்ப வேறு மாதங்களில் குறிக்கிறார்கள். ஆனால், அவர்கள் தங்கள் கலியாணம் முதலிய நன்மையான காரியங்களைச் சௌரமான மாதங்களிற் செய்கிறார்களே

யன்றிச் சாந்திரமான மாதங்களில் செய்வதைக் காணேம். அந்த விஷயத்தில் மட்டும் அவர்கள் எச்சரிக்கையாய் இருந்துகொள்ளுகிருர்கள்.

அதாவது, சௌரமானத்தில் அமாவாசைக்கு முன் வரும் விரதங்களை முந்தினமாதத்திலும் பின்வரும் விரதங்களை அடுத்த மாதத்திலும் தங்கள் பஞ்சாங்கங்களிற் குறிப்பார்கள். முன் மாதத்தில் குறிக்கப்படும் விரதங்கள் தீபாவளி, சிவராத்திரி போல்வன; பின் மாதத்தில் குறிக்கப்படும விரதங்கள் விநாயக சதுர்த்தி, நவராத்திரி, கந்தஷஷ்டி போல்வன. சென்ற குரோதன வருடத்தில் சாந்திரமானிகளான சுமார்த்தப் பிராமணர்கள் தங்கள் பஞ்சாங்கங்களில் தீபாவளியைப் புரட்டாசியிலும், மகாசிவராத்திரியைத் தைமாதத்திலும் குறிப்பிட்டிருந்ததுயாவரும் அறிந்ததே. அந்த வருடத்தில் சைவப்பஞ்சாங்கத்தில் குறிப்பிட்டிருந்த பிரகாரம் சைவர்கள் யாவரும் தீபாவளியை ஐப்பசியிலும் மகாசிவராத்திரியை மாசிமாதத்திலும் சிறப்பாக நடத்தினதும் யாவரும் அறிந்த உண்மையே.

இதுகாறும் கூறியவற்றல் அதிக மாதம் சாந்திரமானிகளான சுமார்த்தப் பிராமணர்களுக்கேயன்றிச் சௌரமானிகளான சைவர்களுக்கு இல்லை என்பது வெள்ளிடை மலைபோல் விளங்கும்.

விரத உத்சவங்களைச் சௌரமானத்திலேயே செய்யவேண்டும், சாந்திரமானத்தில் செய்யக்கூடாது என்று சைவாகமங்கள் யாவும் முறையிடுவதால் சைவநன்மக்கள் யாவரும் விரத உத்சவங்களை ஆகம முறைபபடி சௌரமானத்திலேயே செய்து இறைவன் திருவருளைப்பெற்று இன்புறவேண்டுகிறேம்.

திருவள்ளுவர் - ஓர் மரநூல் பேராசிரியர்

[அ. மா. முத்தைய நாட்டாரவர்கள்]

(௩௩௫-ம் பக்கத் தொடர்ச்சி)

நுணுகி யாராய வேண்டின், ஒரு வித்தைச் (மொச்சை வித்தை) சற்று நேரம் தண்ணீரில் வைத்திருந்தால், அது தண்ணீரை உட்கொண்டு உப்பும். அப்பொழுது அதை ஒரு சிறு ஊசியால் தனித் தனியாகப் பிரித்தெடுப்பின் கீழ்க்கண்ட பாகங்களைக் காணலாம்.

1. தோல்கள்.
2. மூலம்.

தோல்களில் இரண்டு வகைகள் உண்டு. அதில் ஒன்று அகத்தோல், (tegma) மற்றொன்று புறத்தோல் (testa) இவ்விரண்டு தோல்களும் மூலத்தை முற்றும் கவர்ந்து மிகவும் உறுதியுடன் கட்டியிருக்கின்றன. ஆனால் ஒரு முனையில், ஒரு சிறு துவாரம் உண்டு. அது (mycrophyle) எனப்படும். இவ்விரண்டு தோல்களும் தாய் மரத்தினின்று நேரே பெற்றவைகளென்றும், அவைகள் மூலம் ஐந்தையு முணராதவாறு கட்டி நிற்கின்றனவென்றும், ஆதலின் அவைகள் எங்ஙனம் ஒடுங்கிய நிலையில் உரமென்னும் உயிர்க் குணத்துடனொக்குமென்றும், மூலம்தோன்றி வளரும்காலையில் அவைகள் எங்ஙனம் உரமென்னும் குணத்துடனெவ்வாறென்றும் முன் விரித்துக் காட்டினும். இனி மூலத்தை யாராயின் அது மூன்று பெரும் பாகங்களை யுடையது. (1) பின் தாரமாகும் பகுதி (Plumule.) (2.) பின் அங்குரமாகும் பகுதி (Radicule.) (3.) இவ்விரண்டிற்கு மிடையில் ஒட்டியிருக்கும் இரண்டு பருப்புகள் (Cotyledons.) இம்மூன்று பகுதிகளும் சேர்ந்த ஒன்றே மூலமாகும். இம்மூன்று பகுதிகளும், வித்தினளவுக் கேற்றவாறு, பெருத்தும், சிறுத்தும் காணப்படும். புகையிலை வித்துபோன்ற ஒரு சிறு வித்தையாராயினும் அதினிடத்தில் இம்மூன்றும், மிகச் சிறியதாய்க் காணப்படினும், அவைகளுக்கேற்ற குணங்களுடனிற்கும். பின்னும், அவ்வித்து எக்குலத்தின் வழி தோன்றியதோ, அக்குலத்தின் வடிவங்களை, மிக அணுவாய் அமையப் பெற்றிருக்கும். என்னை? பின்னிம் மூலமே முளைத்து வளர்ந்து தன் குல மரமாதலின். இந்த நுண்ணூல் உண்மையைச் சித்தியாரில் "தோற்றமு நிலையு மீறு மாயையின் றொழிலதென்றே சாற்றிடு முலகம் வித்துச் சாகாதி யணுக்களாக வேற்றதே லீண்டு நிற்கு மில்லதே லிவையதின்று மாற்ற நீ மறந்தா யித்தான் மாயையை மதித்திடாயே" என்று விளக்கிக் கூறியுள்ளார். நிற்க மேற்காட்டிய மூன்று பகுதிகளும், மூன்றி மாறுபட்ட வெவ்வேறு தொழிலை யுடையன. அங்குரம் கீழ் நோக்கி வளர்ந்து நிலத்தில் சென்று நீர் கவரும் பகுதி. தாரகம், மேல் நோக்கி வளர்ந்து கதிரவன் கதிர், காற்று இவைகளையேற்று நீரால் கொணரப்பட்ட பொருள்களை, தனக்கு வேண்டிய உணவுப் பொருளாக மாற்றும் பாகம். பருப்புகளோ தாரகம் தனக்கு வேண்டிய உணவுப் பொருள் செய்யு மாற்றலையு மட்டும், வளர்ச்சிக்கு வேண்டிய உணவுப் பொருள்களை அமைக்கப்பெற்ற பகுதி. இங்ஙனம் மூன்று பகுதிகளும், வெவ்வேறு தொழிலுடையவா யிருப்பினும், மூன்றும் சேர்ந்தே மூலமாகும்.

மற்றப் பகுதிகள் நீங்க, அங்குரம் ஒன்றே வித்தாகாது. அன்றி அங்குரம் நீங்கிய மற்றப் பாகங்கள் வித்தாகாது. வித்தின் காரியமாய் முளைக்கவு மியலாது. வித்து மூன்று பாகங்களை யுடையதெனினும் ஒவ்வொன்றையும் தனித்துப் பிரித்தல் கூடாது. அன்றி ஒவ்வொன்றும் தனித்தியங்கவும் இயலாது. ஆதலின்மூன்றும் ஒன்று கூடிய நிலையே வித்தெனப்படும். அன்றே இயக்கமும் பெறும். இக்குறிப்பினின்றே தத்துவ ஞானம், உலகிற்கோத, நம் திருக்களிற்றுப்படியார்

"வித்துமத னங்குரமும் போன்றிருக்கு மெய்ஞ்ஞானம்
வித்துமத னங்குரமு மெய்யுணரில்—வித்ததனில்
காணுமை யாலதனைக் கைவிடுவர் கண்டவர்கள்
பேணுமை யாலற்றார் பேறு."

என்று விளக்கி யுள்ளார். இப்பொழுது மேற்காட்டிய வாராய்ச்சி கொண்டு நாமறிந்தவற்றைத் தொகுப்பின், அவ்வித்தினிடத்து, வாழையடி வாழையென வரும் தன் குலங் காட்டும் வடிவம் கண்டோம். இஃதே ஆணவம் மலத்தின் காரியமாம். பின்நீண்ட புற வுணர்ச்சியால் ஏற்பட்டு உறுதி பெற்ற குணங்கள் கண்டோம். இஃதே கன்மத்தின் காரியமாம். தன் தாய் தந்தையின் சென்ற பிறப்பில் ஏற்பட்ட புற வுணர்ச்சியின் பதிவுகள் காணப்படும். இஃதே வினையின் காரியமாகும். ஆகவே அவ்வித்தினிடத்து, ஆணவ மலம் கன்மம் முன்வினை ஆகிய மூன்று காணப்படும். அங்ஙனமே, ஐந்தையும் காத்த ஒருவனிடம், தன் ஆணவ மலம், கன்மம், முன்வினை ஆகிய மூன்றும் காணப்படும். ஐந்தையும் காத்தலினுல், இப்பிறப்பில் இருவினையும் ஏற்காது காத்தல் கூடுமேயன்றி மேற் காட்டிய மூன்றின் நிகழ்ச்சியை அவன் தடுத்தல் முடியாது. அவைகள் தோன்றியே தீரவேண்டும். இஃதை வித்தினிடத்துக் காட்டுதும்.

முளைத்தலில் முன்வினை காட்டல்.

முளைத்த லென்பது ஒடுங்கிய நிலையிலிருக்கும் வித்தின் மூலம். தன்னுள் ஏற்படு நிகழ்ச்சி மாறுபாட்டின் காரியமாய், விரிந்தும் வளர்ந்தும் வித்தின் தோல்களை யொடித்து முளை தோன்றுதலைக் குறிக்கும். இங்ஙனம் முளைத்தல் (germination) நான்கு பகுதிப்பாட்டினை யுடையது. அவை (1) வித்து தண்ணீர் கொள்ளல் (2) வித்தினிடம் அகவியக்கம் மாறுபடல் (3) வித்து பொடித்தல் (4) முளை தோன்றுதல் என நான்காம்; இப் பகுதிகள் முறையே நிகழ்கின்றன வென்பது நுண்ணூல் கண்ட முடிபு. இப் பகுதிப்பாட்டினை நம் பண்டைத் தமிழ்மக்கள் ஏற்

கெனவே நன்கு தெரிந்துள்ளார்கள். முளைத்தல் என்பதின் பொருள் கூற வந்த சேந்தன் திவாகர ஆசிரியர், "உருவுத றூறுதல் பொடித்தல் தோன்றலென வடித்த நான்கும் முளைத் தலாகும்" என்பர். இவர் இப் பகுதிப் பாட்டினை முறையே வகுத்து நுண்ணூற் கிணங்க விரித்திருப்பது மிகவும் அழகு பெறத் தோன்றுகிறது. இவற்றில் (1) உருவுதல், நீர் உருவிக் கொள்ளல் (2) நாறுதல், ரசாயன வேறுபாட்டில் நிகழும் நாற் றம் (3) பொடித்தல், நீர் கொண்டதாலும் ரசாயன வேறுபாட் டாலும், மூலம் விரிந்ததின் காரணமாய் வித்து பெருத்துப் பொடித்தல் (4) அங்ஙனம் வெடித்த வித்தினின்றும் முளை தோன்றல், இவைகளைக் குறிக்கும். நிற்க, மூலம் எவ்வளவு சிறிய தேயாயினும் ஸ்தூலமேயாகும். ஸ்தூலம் சூக்குமத்தின் காரி யமே. ஆதலின் மூலத்தின் உள்பொருள் சூக்குமம் உண்டு. அதுவே திதியாகும். 'திதியென்றது ஈண்டு உள்பொருளென் னுந் துணையாய் நின்றது' என்பது சிவஞான முனிவருரை. இதுவே (protaplasam) எனப்படும். இத் திதியே ஒடுங்குமியல் புடையது. ஆதலில் இது சூக்கும ஸ்தூலமாகும். இது மலத்தி லொடுங்கும். 'தோற்றிய திதியே ஒடுங்கி மலத்துளதாம்' என் பர் ஆசிரியர் மெய்கண்டார். இம்மலம் (chromosa) எனப்படும். ஆதலின் மூலத்தினிடம் மலம் உண்டெனப் பெறப்படுகின்றது. இம்மலம் மூலத்தினிடத்தில் நடுவில் தோன்றியதன்று. தொடர் பாய் வாழையடி வாழையென வந்த மலமாகும். என்னை, இல்ல தற்குத் தோற்றமின்மையின், ஆண்பூவின் மகரந்தம் பெண் பாகத்தில் விழுந்து முளைத்து, கர்ப்பத்தை யடையுங்கால், ஆண் மகரந்தத்தினுள்ள திதி, மூன்று பாகமாகி, கர்ப்பத்தி னுள்ள மூன்று திதிபாகங்களுடன் புணரவே கருக்கொண்டு மூலமாகும். இம் மூலத்தின் மூன்று பாகங்களும் இவைகளே யாம். ஆண் பெண் மலங்களினுள்ள குணங்கள் இம் மூலத்தில் காணப்படும். அதுவே கன்மம். அங்ஙனமே வினையும் காணப் படும். ஒவ்வொருவகை மரமும் தனக்கே சிறப்புடைய இலக்கண முள்ள மலத்தை யுடைத்து, இம் மலத்தின் காரியமே, சோளம் சோளமாய் முளைத்தல். இம் மலத்தின் வேறுபட்ட விலக்கணத் தின் காரணத்தாலேயே, சோளமும், கம்பும் உணராது மறுத் தற் கேதுவாகின்றது. கன்மம், வினை இவைகளுக்கும் இங் ஙனமே கண்டுகொள்க.

இனி ஒரு வித்து நீர் நிரம்பிய நிலத்தை யடைந்தகாலையில், தன் தோல்கள்மாட்டுள்ள துவாரத்தின் வழி நீர் உட்செல்லவும், மூலத்தினிலுள்ள திதி அதைப் பற்றுகிறது. திதியே சூக்கும ஸ்தூலமாகையால், அதின்மாட்டுள்ள, அணுக்கள் ஒவ்வொன்

திற்குமுள்ள பற்றால் புணைந்திருக்கின்றது. நீர் அணுகவே, அவ்வணுக்களுக்கும் நீரின் அணுக்களுக்குமுள்ள பற்று, அவ்வணுக்களின் ஒவ்வொன்றிற்குமுள்ள பற்றைவிட அதிகமாயிருப்பதால், நீர் பருகப்படுவதுடன், அத் திதியினிடமும் பெருங்குழப்ப மேற்படுகின்றது. அதனால் திதியின் சிறுபாகம் நாசமடைகிறது. அந் நாசமடைந்த பாகத்தில் பொதிந்திருந்த சக்தி, வெளிக்கிளம்ப, அச்சத்தியால்,பயன்படாநிலையில் அமைக்கப் பெற்றிருந்த உணவுப் பொருள், பயன்படும்படி மாற்றப்பட்டு, திதியினிடம் கொணரப்பட்டுத் திதிபாலேயே திதியாக்கப்படுகின்றது. இங்ஙனம் நாசமும் படைப்பும் முறையே தொடர்பாய் நடைபெற, நாசமாகும் பகுதியைவிட படைக்கப்படும் பகுதி அதிகமாயுறவே திதி பெருக்கமடைந்து, அதனால், திதியின் காரியமாகும் ஸ்தூலமும் பெருக்க மடைகின்றது. அதனால் மூலம் வளர்ந்து வெளிவரும். இங்குப் பற்று என்றது மாயை. (affinity). ஆதலின், வித்தில் திதி ஒடுங்கி நிற்றற்கு மாயையே காரணம். நீரின் அணுக்கள் மாட்டுப் பற்று (மாயை) ஏற்படுவதேன்? அப் பற்றும் பல்வேறாய் அணுக்கள்தோறும் மாறுபட்டுக் காணப்படுவதேன்? என்ற வினாக்கள் எழுந்தே தீரும். அணுக்கள்மாட்டுப் பற்று ஏற்படுவது அவைகள்பாலுள்ள சக்தியின் காரணமாம் இச் சக்தியே அருள் சக்தியாகும். இச் சக்தி எங்கும் ஒரு நிலையிலிருக்க, அணுக்களின் பற்று அவ் வணுக்களின் உட்பொருள் வேற்றுமைக்கிணங்கி மாறுபட்டே நிற்கும். இஃதையே வினைக் கேற்றவாறு சக்தி நடத்துமென்பர். 'அத் தன்ருணிற்றலவர் வினையால்' என்பர் ஆசிரியர் மெய்கண்டார். நிற்க வித்தினுள்ள, உணவுப்பொருள் நீண்டு மூலத்தைக் காப்பாற்றக் கூடாதாகையால், அங்குரமும், தாரகமும், வெளியுறவே அங்குரம் நீருடன் உலகப் பொருளை உட்கொள்ளவும், தாரகம், கதிரவன் கதிரினின்று சக்தியைக் கவர்ந்தும், காற்றையுட்கொண்டும் இவைகளிலிருந்து உணவுப் பொருளும், பின் திதிப் பொருளும் படைக்கப்படும். இந் நிகழ்ச்சி பின் அவ்வுயிர் ஒடுக்கமடையும் வரையினும் நிகழும். இங்ஙனம் வித்து முளைத்தலில் நிகழும் நிகழ்ச்சியை நம் ஆசிரியர் மெய்கண்டார் மிக நுணுகி யாராய்ந்து மிகவும் அழகுபட

"வித்துண்டா மூல முளைத்தவா தாரகமா
மத்தன்ருணிற்ற லவர்வினையால்—வித்தகமாம்
வேட்டுவனு மப்புழுப்போல் வேண்டுருவந் தான்கொடுத்துக்
கூட்டானே மண்போற் குளிர்ந்து"

எனக்கூறியுள்ளார்.இவ்வெண்பாவிலுள்ள நம்சைவசமயக்கொள்கைகள் எங்ஙனம் தற்கால உயர்தர நுண்ணூற் பொருளுக்கும்

அப்பாலும் சென்று முடிபு காட்டுகின்றதென்பதை ஆராயின் இக்கட்டுரை மிக விரியுமாதலால், இக் கட்டுரைக்கு வேண்டிய சில குறிப்புகளை மட்டும் நுண்ணூற்குப் பொருத்திக் காட்டியுள்ளேன். சிவஞான போதத்தை நுணுகி யாராய்ந்கார் இவ் வுரையாலுண்மை காணில் கொள்க. அன்றேல் விடுக. இதுகாறும் கூறியவாற்றால், அணுக்களின் சக்தி காரணமாய் ஏற்பட்ட மாயையிலொடுங்கிய திதியினின்றே, அணுக்களுக் கேற்றவாறு சக்தியினால் மாறுபட்ட மாயையின் காரணமாய் அத் திதியினின்றே தோன்றும் என்பதும், சக்தி சங்கற்பித்த வழி ஒடுக்கம் ஏற்படுத்திய மாயை, நீரின் முன்னே அச் சத்தியின் காரணமாய் வேறுபட்ட மாயை தோன்றுதலின், நீரில்லாக் காலை முளைக்காமையும், நீருற்றகாலை முளைக்கு மென்பதும், நாசமடையும் பகுதியினும், உற்பத்திப் பகுதி யதிகமாகலின், உள் திதிப் பொருள் பெருக்கமடைந்து புறவளர்ச்சி தோன்று மென்பதும்; அங்ஙனம் வளர்தற்கு வேண்டிய அசத்துப் பொருள் முதற்கண் வித்தின் பருப்பினின்றும், பின் நிலம் காற்றுகதிரவனிடமிருந்துங்கொள்ளுமென்பதும் ஒடுங்கியிருந்த திதி நாசமடைந்தே தோற்ற மேற்படுதலின், அந்தமே முதல் என்பதும், தாய் தந்தைபால் கிடைத்த திதியின்பாலே ஈறும் தோற்றமு முடைத்தாகலின் தாய் தந்தை குணங்களைக் காட்டு மென்பதும், தொன்று தொட்டுத் தொடர்ந்துவரும மலத்தின் பாலே திதி தோன்றுதலின் தன் குலத்தையே காட்டு மென்பதும் பெற்றும். இக் குறிப்பில் திதியென, சிவஞான போதத்தில் குறித்துள்ளதை 'protaplasam' என்றும் மலத்தை 'chromosa' என்றும் மாயையை 'chemical affinity' என்றும்; தற்கால நுண்ணூற் கருத்திற் கிணங்க முடித்துக் காட்டியும், எங்ஙனம் இருவகை நூற்கருத்தும் பொருத்த முடையனவாக விருக்கின் றனவெனச் சுருக்கியும் கூறியுள்ளேன். இஃதை உயர் நுண்ணூலாராய்ச்சி யறிவுடையோர் ஆராய்ந்துணர்க. மாறுபடக் காணின் 'செல்வியின்' மூலம் வெளியிடின், நம் சமய வுணர்ச்சியை ஆராய்ச்சி முறையில் விருத்தி செய்யும் தொண்டாகும்.

மேற்காட்டிய வித்தின் முளைத்தலின் தத்துவத்தால், வித்து ஒருகால் தன்னுள்ள மூவினைகள் ஒக்கும் வரையினும், முளைத்தேதீரவேண்டு மென்பதும், அங்ஙனம் அஃது எவ்விடத்து முளைக்கு மெனினும், தன்னுள்ள மூவினையின் துணைகொண்டே முளைக்கு மாதலால், அவைகளின் குணங்களை வெளியில் காட்டியே தீரவேண்டு மென்பதும், தன்னுள்ள மூவினையும் பரிபாகமடைந்து தன்னுள் ஒவ்வாத காலம் வரையும், தான் முளைக்காமல் தன்னைக் காத்துக்கொள்ள முடியாதென்பதும் ஆதலின்

தன்னைக் காத்துக்கொள்ளுவ தொன்றினாலேயே, தன் மும்மலம் நீக்கி முதல்வன்றாளடைய முடியாதென்பதும், பெற்றாம். அங்ஙனமே ஒருவன் தன்னை ஐம்புல உணர்ச்சியினின்று காத்துக்கொண்ட ஒன்றினாலேயே, தன்னைப் பிறக்காதும், பிறந்த காலையில் தன் முவினைக் குணங்கள் தன்மாட்டு நிகழாமலும், தான் பதிநிலை யடையவும் செய்துகொள்ள முடியாது, அஃதவ்வாறாக நம் பரிமேலழகியார் தன் சிறப்புரையில் "அந் நிலத்திற் சென்று முளைத்தலின் வித்தென்றார். ஈண்டுப் பிறந்திறந்து வருமக னல்லவென்பதாம்" எனக் கூறுவ தெங்ஙனம்? தன் முன்வினையைய மட்டும் தான் ஐந்தையும் காத்தலால் ஒருகால் நீக்க முடியும். பின்னும் கன்மமும், மலமும் வந்தே தீரும். இவைகள், திதிக் கடவுள், படைப்புக் கடவுள், மலம் இவைகள் மாட்டுப் பதிந்த பதிவுகளாதலால் இவற்றை நம் ஆசிரியர் மெய்கண்டார் அழகுபடக் கூறுவர்.

> ஐம்பொறியி னல்லையென மந்த தரசிவனை
> யைம்பொறியை விட்டங் கணைசகல—னைம்பொறியி
> னீங்கானீர்ப் பாசிபோ னீந்துமல கன்மம்வரி
> னீங்கானை நீங்க நினைந்து.

என அருளுவர்.

இவ் வெண்பாவில், ஆசிரியர், ஐம்புல வுணர்வு தீர்ந்து (விட்டு) சிவனை அணைந்த சகலன், மீள ஐம்புல வுணர்வால், அதனை (சிவனை) நீங்குவனல்லன், அந நிலையில், காலினால் நீரில் விலக்கப்பட்ட பாசிபோல், கன்மம் மலம் வரும், ஆனால் அவைகள், நீங்கானை நினைக்க நீங்கும் என்கின்றார். அங்ஙனம் வலிவு வாய்ந்த கன்மம், மலம், எங்ஙனம் ஐந்தைக் காத்த லொன்றாலேயே நீங்கப் பெறும் இவ் வுண்மையை, நம் சைவ சமயவாசிரியர்கள் பலர் குறிப்பிட் டிருக்கின்றார்கள். அவைகளிற் சில கூறுதும். நம் உய்யவந்த தேவநாயனார் தானருளிய திருவுந்தியாரில்,

> "வித்தினைத் தேடி முளையைக் கைவிட்டவர்
> பித்தேறி னார்களென் றுந்தீபற
> பெறுவதங் கென்பெணே யுந்தீபற"

என அழகுபடக் கூறுகின்றார். இங்கு 'வித்து' ஐந்தைக் காத்தலையும், 'முளை' மும்மலமும் தோன்ற விருத்தலையும் குறிக்கும். நிற்க, மணிவாசகர், தம் இனிய தமிழால், மிகவும் தெளிவுறக் கூறுவர்.

"பிணக்கிலாதபெ ருந்து றைப்பெரு
மானுன் னாமங்கள் பேசுவார்க்
கிணக்கி லாததோ ரின்ப மேவருந்
துன்ப மேதுடைத் தெம்பிரா
னுணக்கி லாததோர் வித்து மேல்விளை
யாம லென்வினை யொத்தபின்
கணக்கி லாத்திருக் கோலநீ வந்து
காட்டி னாய்கழுக் குன்றிலே"

இவர் கூறும் இந் நுண்ணூல் விளக்கம், நம் திருவள்ளுவர் காட்டிய 'வித்து' என்பதைத் தெளிவுற விளக்குவது போன்று, இங்கு வினையென்றது, மலம் கன்மம் முதலிய வினையைக் குறிக்கும், அவ் வுள்வினைகள் ஒத்த பின்னே, வித்து மேல் விளையாமல் நிற்குமெனவே, வினை யொத்தற்குமுன், வித்து முளைக்குமெனப்படுகின்றது. (தொடரும்)

தேரையர் மகாகரிசல்

[திரு. மா. வடிவேலு முதலியாரவர்கள்]

(௩௨௫-ம் பக்கத் தொடர்ச்சி)

வினை தீர்த்தார், தையனாகி, முத்துக்குமாரசாமி
இவர்கள் வணக்கம்

நேரிசைவெண்பா

வித்தகஞ்சேர் புள்ளிருக்கும் வேளூர் வயித்தியரென்
அத்தமிறை நாடிமருந் தாகையால்—சித்திரம்போல்
தையலுமை யாளெனது தாயா ரருளியமுத்
தையனென தாசிரிய னாம்.

(சொற்கூட்டு) என் அத்தம் இறைநாடி மருந்து, வித்தகஞ்சேர் புள்ளிருக்கும் வேளூர் வயித்தியர், ஆகையால் சித்திரம்போல் தையல் உமையாள் எனது தாயார்; அருளிய முத்தையன் எனது ஆசிரியன் ஆம்.

(சொ - ள்.) என் அத்தம் = என்னுடைய கையில் வழங்கிக்கொண்டிருக்கிற, இறை நாடி = அரசன் என்று சொல்லப்

பட்டதான வளி (வாத) நோய்களைப்போக்கி (உடலை நல்ல நிலையில் வைக்கும் வன்மையுள்ள) மருந்து = ஆமணக்கு என்னும் மருந்தை (ஒப்பான தன்மையுடையவர்) வித்தகம்சேர் = சதுரப்பாட்டையுடைய, புள்ளிருக்கும் வேளூர் வயித்தியர் = திருப்புள்ளிருக்கும் வேளூரிலே எழுந்தருளியிருக்கின்ற வயித்தியத் தலைவராவர், ஆகையால்; (அவர் இந்நூலுக்குண்டாகும் எல்லா இடையூறுகளையும் போக்கி இதைக் காப்பர்; அவர் அங்ஙனஞ் செய்தலால்), சித்திரம்போல் = ஓவியம்போல், (அவரினின்றும் பிரியாமலிருக்கின்ற) தையல் உமையாள் = பெண்ணாகிய உமையம்மை, (தையனுயகி) எனது தாயார் = என்னுடைய தாயாவாள்; அருளிய = எனக்குத் திருவருள் செய்த, முத்தையன் = முத்துக்குமாரசாமி, எனது ஆசிரியன் ஆம் = என்னுடைய ஆசிரியனாவன் (எ - று.)

எனவே, ஆமணக்கானது உடலைப் பலவகையாக வருத்துகின்ற வளிநோய்களைப் போக்கி அதை நல்ல நிலையில் வைத்துக் காக்கும் என்பது பெற்றாம்.

(பொ - ரை.) என் கையில் அரசநாடியாயுள்ள வளிநோய்களை நீக்கி உடலைக்காக்கும் ஆமணக்கைப்போல இந்நூற்குண்டாகும் இடையூறுகளைநீக்கி இதைக் காப்பவர் வயித்தீஸ்வரர் ஆகையால் அவருடன் ஓவியம்போல் பிரியா நங்கையான தையனுயகியம்மை எனது தாயாவள். முத்துக்குமாரசாமி எனது ஆசிரியராவர் (எ - று.)

அவர் இந்நூலுக்குண்டாகும் எல்லா இடையூறுகளையும் போக்கி இதைப் பாதுகாப்பர் என்பது குறிப்பெச்சம்.

வித்தகம் விசித்திரம் என்று உரைப்பினும் அமையும்.

வயித்தியரென்னத்தமிறை நாடி மருந்து என்றதை, 'அத்தம் இறைநாடி மருந்து என்ன வயித்தியர்' எனக்கொண்டு, 'என்ன' என்றதற்குப் 'போல' எனப் பொருள் கொள்ளினும் அமையும்; ஆண்டு அகரந்தொகுத்தல் கொள்க.

இறைவன் இந்நூலைக் காப்பான் எனவே, தையனுயகியும், முத்துக்குமாரசாமியும் காப்பார் என்பது தோன்றத், 'தையலுமையாளெனது தாயாரருளிய முத்தையனெனதாசிரியனும்' எனக் கூறினர்.

'அருளிய முத்தையன்' என்றதற்கு அவள் பெற்றருளிய முத்தையன் எனினுமாம்.

இதுகாப்பாதலின், 'எனது ஆத்மரோகங்களை அறத் தீர்க்கும் அரிய ஔஷதமாவர்' என்றது வழக்கன்று.

ஆசிரியன் என்ற சொல்கொண்டு 'அருளிய' என்றதற்கு எனக்குத் திருவருள் செய்த எனப் பொருள் கொண்டனம்.

ஈண்டு, 'ஆமணக்கு' எனப் பொதுப்படக் கூறினும் அதின் பிரிவான சிற்றாமணக்கு, பேராமணக்கு என்னும் இரண்டையும் அவற்றின் ஐந்துறுப்புக்களையும் (பஞ்சாங்கம்) அவற்றின் காரியங்களையுங் கொள்க.

இக்காரணத்தாலேயே ஆமணக்கை 'வாதமடக்கி' 'வாதமிறுக்கி' என வழங்குவர்.

இறை நாடி வாதம் என்பதை;

"பொற்றா மரையான் புனைமெய் யரண்காக்கும்
பொற்றா மரையான் புகல்வதென்னே—பொற்றாம்
வளவினிலை யாக்குரம்பை மன்னனென மன்னவ்
வளவினிலை யாக்கு வளி" (தே. ய. வெ.)

என்பதாலறிக. வாதத்தின் குணங்களை,

"அங்கங் கறுக்குமிசை யானனமா மேனியுளை
அங்கங் கறுக்குமிசை யாதுணவா—யங்கம்
பரமாகப் பண்ணுமுடல் பாவகனு நோய்வி
பரமாகப் பண்ணுநிரு பன்"

என யமக வெண்பா என்னும் மருத்துநூலினும்,

"ஆகங் கறுக்குநோ யாகந் துடிக்கும்
ஆறுத்தீ யெனமெய் யேகங் கொதிக்கும்
ஆறுமெய் வெயர்திமிர் மீமந்தம் வாய்மூச்
சாகுமேயிது வாதமே வினி"

எனக் கரிசல் என்னும் இந்நூலினும்,

"கண்ணிரண்டு நீர்சொரியுங் காணுந் தலைவலியும்
பண்வயிறு தானிரைதல் பண்ணும்வேற்—கண்ணாய்
முடக்க லதிசோம்பல் கொட்டாவி விக்கல்
அடக்கரிய வாதகுண மாம்"

என வியாசர் என்பதினும்,

"அறியவிம் மூன்றின தாண்மைசொன் னார்நந்தி
எறியநல் வாத மெறிக்குங் குணங்கேளு
குறியெனக் கைகால் குளைச்சு விலாச்சந்து
பறியென நொந்துடல் பச்சைப்புண் ணாகுமே.

புண்ணாய் வலிக்கும் பொருமுங் குடலோடித்
தண்ணா மலத்தைத் தம்பிக்கும் போக்கா
தொண்ணன வாசன முறவே சுருக்கிடும்
பண்ணார் குளிர்சீதம் பகுந்திடும் வாதமே"

எனத் திருமூலர் நூலினும்,

வாதசுரக்குணத்தை,

"வாதசுரத் தின்குணத்தை யுரைக்கும் போதில்
வதனமித முலர்ந்துகறுத் திருக்கு மன்றி
நோதலுண்டாம் வடகமெல்லா மசைத லாகும்
நொய்தற்பா ரித்திருக்கு மிரும லாகும்
ஓதுமுட் டினமாகிப் பெத்த மாகி
உறுதாக மிகவாகி மயிர்க்கூச் சாகிச்
சீதளமா கக்குளிர்ந்து கண்டு நாளுஞ்
செறிந்திடுமென் றுலகறியச் செப்பு நூலே"

என்பதாலும்,

"வாதங்குளிர்ந்து நடுக்கிமிகப் பசிதோன்றுமற் றியக்கமுற்று
வாதைவயிறு தான்பொருமி மலஞ்சிக்கிட்டு முகங்கருகிச்
சோதியுடலுந் துடிதுடித்துச் சுகித்துச்சந்து நெகிழ்ந்துநோம்
காதையடருங் கருங்கண்ணாய் வாதசுரத்தின் கணக்கிதுவே"

என்பதாலுமறிக.

ஆமணக்கு நெய்க்குணத்தை,

"ஆமணக்கு நெய்யா லனலமுண்டாம் யாவர்க்கும்
பூமணக்கு மேனி புரிகுழலே—வாய்மணக்கக்
கொள்ளில் வயிறுவிடும் கோரமுள்ள வாயுவறும்
உள்ளில்வரு குன்மம்போ மோது"

"அம்பொனிற மும்விந்து மாங்குடலி னேற்றமறும்
ஐம்பொறிச் சூடிரண மாறுங்காண்—அம்புவியிற்
பாமணக்கு மின்பமொழிப் பாவாய் நலஞ்செறிந்த
ஆமணக்கி னெய்யை யருந்து"

எனவும்,

சிற்றாமணக்கு நெய்க்குணத்தை,

மருந்தி னழலும் வளியா மூலத்துள்
பொருந்து மழலுமறப் போக்கும்—குருந்திற்கு
நற்றா யெனவளர்க்கு நாளுமழ லுந்தணிக்குஞ்
சிற்றா மணக்கினெய்தான் றேர்”

எனவும் பொருட் பண்புநூல் (குணபாடம்) கூறியவற்றானறிக.

(தொடரும்)

புகழேந்தி - செந்தமிழ் நாடகம்

[திரு. அ. நடராஜ பிள்ளையவர்கள்]

(௬௩௨-ம் பக்கத் தொடர்ச்சி)

முதலங்கம் - மூன்றாங்காட்சி

இடம்—பாண்டியன் அரண்மனைப் பூஞ்சோலை.

காலம்—மாலை. நடர்—கற்பகவல்லி, செந்தாமரையாள், வெண்டாமரையாள், தோழிகள், குறத்தி.

(கற்பகவல்லி தோழிகளோடு பந்தாட)

(கந்துகவரி - இவை மூன்றுங் கலித்தாழிசைகள்)

கற்பகவல்லி:—

சந்தமார்ந்த தனமிரண்டுந் தாவியாட வாண்முகம்
அந்தமார்ந்த முத்தின்வேர்வை யளித்திடவே சோமன்வாழ்
சுந்தரம்மாம் வழுதிவாழ்கத் தொடர்ந்துபந் தடித்துமே
சோதிநாதன் வாழ்கவென்று தோழிபந் தடித்துமே. (௧)

செந்தாமரை:—

கொந்திலங்கு பூங்குழற் குழன்றசைய மேகலை
கந்திலங்கு செங்கரங் கன்றுமென்றே யார்த்திட
சந்திரன்கு லத்துமாறன் றழைகவென் றடித்துமே
தாவிலாரம் பூண்டமார்பன் றழைக்கப்பந் தடித் துமே

வெண்டாமரையாள்:—

பந்துகையிற் பூமியிற் படிந்ததில்லை யந்தரம்
வந்ததில்லை யென்னவே மாதர்யாருங் கூறிடச்
சொந்தமான வளவன்வாழ்கச் சொல்லிப்பந் தடித்துமே
சூரியன்றன் மரபுவாழ்கத் தோழிபந் தடித்துமே, ௩

(குறத்தியின் தோற்றம்)

(குறம் - அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்)

குறத்தி:—

பாரினி னடப்பென நடந்தன பார்த்துமேகைக்குறிசொல்லிடும்
நேரியில் வாழ்ந்திடு குறத்திநான் நேரிழை மார்களே யுங்களில்
ஆருடைக் கையினைக் காட்டினு மாவன வகத்தியங் கூறுவேன்
வாருடைநேருடை மங்கைகாள்! வழங்கிய வோர்கலை
வழங்குமே. ௧

(நிலைமண்டில வாசிரியப்பா)

வேண்டாமரையாள்:—

ஓ! கோ! மலைக்குற வுத்தமி யோ! நீ!
பாகின் மொழிசேர் பங்கயச் செல்வியெங்
கற்பக வல்லியின் காந்தளங் கையினை
யற்புளத் தோடே யாடியிற் பார்த்துப்
பிற்பக னிகழ்வன பேணி யுரைப்பிற்
கற்பகஞ் சார்ந்த காகமே போல
பொற்பகம் பெறுவாய், புகரினை நிகர்த்தோய்!

(குறம் - அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்)

(குறத்தி கற்பகவல்லியி னிடக்கையினைப் பார்த்து)

குறத்தி:—

கையினி லிரேகைசி வந்துமே
காணுதற் கற்பமாய்ச் சிறுத்துமே
செய்யினிற் கண்டிடு தாமரை
சேர்ந்துமே புத்தியா மிரேகையும்
துய்யதோர் பெருவிர லிறையினிற்
றொடுத்ததோர் சங்கிலி ரேகையும்
ஐயெனச் சுட்டிய விரலடி
யழகிய விறைபல வாயுமே. ௨

காணலான் மங்கைமீர்! பொற்றொடி
கருதிய செல்வமு மாயுளும்
மாணுடை லட்சுமி வாசமும்
வாணியி னேசமும் யாவருந்
தாணிழற் சேர்ந்திடு போகமுந்
தளர்தலில் வெற்றியுங் கொண்டுளாள்
மாணிழை காதலிற் கதித்துளாள்
வடதிசைக் கொண்கனே வாய்ப்பனே. ௩

காலமி ரண்டுநான் கூறினேன்
கதிர்மதி தப்பினு மென்குறி

பாலினு ணெய்பினை மானவே
பலித்திடு நிச்சயம் பழையதோர்
சேலையுங் கஞ்சியுங் கொடுத்திடும்
தேடுவ னென்மகன் விரைவினில்
ஓலையும் மட்டையுங் கொண்டுபோ
யுதவிடல் வேண்டுவன் றிறத்தினே. ௨௦

வேண்டா:—கைக்குறி யுணர்த்திய சாரிகாய் ! உனக்கு
மைக்குறிக் கண்ணி மகிழ்ந்துமே கொடுத்த
மாலையை வாங்கி வாழ்த்தியே செல்வாய்.
[முத்துமாலையொன்றைக் கொடுக்க)

குறத்தி:—மாலையாய்ச் சுரும்பினம் வந்துமே சுழலும்
நாறிருங் கூந்த லங்காய்! குடரிற்
பசியால் வாட்டமும் பழையதோர் கந்தைத்
துணியால் வாடைத தொல்லையு மடையும்
எனககேன் முத்தா லியன்றவிம் மாலை?
மனக்குரக் கினைவீண் வாதையிற் படுத்தவோ?
ஊணு முடையு முண்ணவும் பூணவும்
காணுதல் போல, காட்சியி லெப்பொருள்
மாணுறக் கண்டனை? வழுத்துவாய் சிறிதே.

கற்பகவல்லி:—(குறத்தியைநோக்கி)
அறிவினு மாண்டினும் பெரியோய்! கூறிய
(செந்தாமரையைநோக்கி)
வனைத்துஞ் சரியே; அவ்வணஞ் செய்வோம்
செந்தா மரைவாழ் திருவே யனையாய்!
நந்தா விக்குறி நங்கையை யழைத்துச்
சென்றுநல் லூணுஞ் சிறந்தவோ ராடையும்
கன்றினைக் கற்ற கரவா தூட்டன்
மானக் கொடுத்து மகிழ்ந்திடச் செய்து
கானக் கொடியே கடிதினில் வருவாய்.

செந்தாமரை:—சித்தப் படியே சென்றனன், வருவல்;
மத்தக் களிறெனை வளர்ந்தெழு முலையாய் !
[குறத்தியுடன் செல்ல)

கற்பகவல்லி:—(மற்றத் தோழிகளைப் பார்த்து)
பாங்காள் ! ஆடிய பந்தினைப் பார்த்தவர்
‘வாங்கிடு மோகை வருமோ பூமியில்?
இடைவெளி தனிற்ற னியங்குமோ?’ எனவே

யடைவுடன் கூறிய வப்பந் தாட்டங்
குறத்திகைக் குறியாற் குடங்கையி லணைந்த
திறத்தினைக் கொண்டது திரும்பவு நாளை
யாடுவம்; சென்று வருவீர்; அஃதோ

(செந்தாமரை வர)

தேடுதற் கெளிதாய்ச் செந்தா மரையும்
வந்தனள், மூவரும் வண்கா னுகர்ந்து
மந்தமா ருதத்திற் சிந்தையைத் திருத்திச்
சிறிதிவ ணமர்ந்து திரும்பிடு வோமே.

முதற்றோழி:— மறியமர் கண்ணீ! வழுத்திய படியே
சிறியேம் படர்ந்தனம்.

(தோழிகள் போக)

கற்பகவல்லி:—(செந்தாமரையை நோக்கி)
தேமொழிக் கிள்ளையும்
முல்லைப் பூவும் முருக்கி னிதழும்
சொல்லெயி றிதழிற் றோற்கு நங்காய்!
வல்லையிற் றிரும்பிய நல்லெழில் யாதோ?

செந்தாமரை:—இந்திரை யவளினுஞ் சுந்தர மிகுத்த
பைந்தொடி நங்காய்! பார்வதி யனைய
செவிலியை வழியிற் கண்டனன், செப்பினன்,
குவிமுலைத் தேவியு மவளுங் குறத்தியைக்
குறியாற் றெளிந்து கொடுத்திட வுன்னிச்
செறியா தென்னைத் திரும்ப விடுத்தனள்.

கற்பகவல்லி:—நன்று! நன்று! நம்முடைப் பித்தம்
மன்றலி னோர்ந்தது மற்றவர் கட்கென்?

வெண்டா:— அன்றென் தாயே! அவர்கட் கேயிம்
மன்ற னம்பினு மகிழ்ச்சியை யளிப்பது.
ஈன்ற ஞான்றினு மிணையறு மணத்தைப்
பூண்ட ஞான்றே புதல்வரைப் பெற்றோர்
களியெனுங் கடலிற் கவலையாந் தெப்பம்
பழியென விலக்கிப் பாய்ந்தின் புறுவது.

கற்பகவல்லி:—ஆமாம், தோழீ! அவர்கட் கேமணம்
சேமமாம்; ஆகலி னன்றே? திருமண
மக்களின் மனக்கோள் வையகந் தன்னிற்
றக்க தன்றெனத் தகைந்தன ராகி
நடத்திடு பெற்றோர் நாடொறு நாட்டினிற்
குடக்கெழு மதியென குழுமிடல் காண்டும்

வெண்டா:—கலைமக ளெள்ளவையைக் காட்டினில் வென்ற
இலைமுக வைவே லிணையடி மறவாத்
தையால்! இங்ஙனஞ் சாற்றேல் பணப்பேய்க்
கையா ளன்றோ? கண்ட திம்முறை.

செந்தாமரையாள்:—(கற்பகவல்லியை நோக்கி)
பித்த மென்றதென்? பேசிடு சோதிடம்
உத்தம வாருட மோக்கிய விரேகை
சாத்திர மெல்லாந் தவறோ? வார்குழால்

கற்பகவல்லி:—
ஆத்திரப் படேலெ மன்னையே யனையாய்!
சோதிட முதலாச் சொல்லிய பலவும்
வாதிட வொண்ணு மாபெரு முண்மையே
ஆயினு முண்மையா யறிந்தோர் மிகச்சிலர்
தாயினுஞ் சிறந்த தன்மையா மச்சிலர்
காணுதல் கார்த்திகைக் கவின்மதிப் பிறையைக்
காணுத லொக்கும்; காணினு மவர்கொள்
செருக்கு மவாவுந் தென்னவன் பொதியைப்
பொருப்பினு மிகுமே எனினும், புகன்றன
நன்றெனி னலட்சிய நன்மலை யேறிக்
குன்றெனு மனமாக் கோட்டையைக் கட்டிப்
பகுத்தறி வதனைப் பகைவனுக் கொண்டு
வகுத்தவன் செயலையு மடியாற் றொலைப்பர்
தீதெனி லந்தோ! திடுமெனத் துயரங்
காதுறு கவலைக் கடலினி லாழ்ந்து
'தெய்வந் தன்னா லாகா ததுவுஞ்
செய்வினை முயற்சியின் கூலியாச் சிறிது
பெறுகுவ' ரென்ற பெரியோர் மொழியும்
வறிதே யாக மயங்கியே நலிவர்.
ஆகலின். அணங்கே! அவனியி லெவருந்
தாகமாய்ச் சோதிட சாத்திரங் கேட்டுத்
திரிவதைக் காட்டிலுந் திகம்பர னிணையடி
பரிபவ மனத்திற் பாங்கா யிருத்திக்
கடமையைச் செய்து காரியா நுகூல
மடமையிற் சிந்தையை மட்டுப் படுத்தி
வாழ்தலே நன்றாம், மடவரற் றோகாய்!
அணியாய்ப் பூத்துள வவ்வசோ கின்நிழன்
மணியாய் மிழற்றிடு வனிதைகாள்! சென்று
கன்னற் பொழுதினைக் கழிப்போம், வருவீர்.

(மூவருஞ் சென்றனர்)

சே

என்னே! பாங்கிகாள்! இம்மா மரத்திற்
பொன்னே ரசோகப் புதுமலர் நிறைந்தும்
வறியசெவ் வாய்க்கு வழங்கிடு மங்களப்
பொறியுடை வார மெனவே புகறன்
மானச் சோக மலராய் மாறின!
நானக் கூந்தலு நல்லதோர் கலையும்
வளையு நாணு மலர்க்க ணீருஞ்
சோருமிஃ தென்னே! தீயதோர் நெஞ்ச
நீரினுட் கயலாய் நிலையா தந்தோ!

(சோர்ந்து சாய)

சேந்தாமரை:—(இருகையாலணைத்து)

ஆ! கா! இளங்கொடி! அரும்பெறற் பாவாய்!
மாகா திபற்கும் வாய்த்திடாக் கற்பகக்
கொடியே! வந்ததென் னொடியினிம் மாற்றம்?

வெண்டாமரை:—(கற்பகவல்லியை நோக்கி)

பூவையு மொழியி லாவல்கொ ளணங்கே
தேவை நிகர்த்தவிவ் வசோகு தெளியின்,
கூடினர்க் கன்றிக் கொழுநனிற் பிரிந்தார்
வாடிடச் செய்யும் மன்மதன் றனது
பூங்கணை யைந்திற் புல்லிய வுணர்வினை
வாங்கிடு சோக வாளியென் றுணர்வாய்.

கற்பகவல்லி:—வெண்டா மரையே விளம்பிய தொவ்வும்
கொண்டா டுங்கனி யெனவே குடதிசை
கண்டான் கதிரவன்; கடிமனை புகுந்திடப்
போவோம் வாரீர், பொருவில் பாங்கிகாள்!
காவினை நீங்குங் கடிமயி லெனவே.

(மூவரும் போக)

(காட்சி முடிகிறது)

பொருள்வயிற்பிரிவு

[இளவழகனார்]

செங்கதிர்ச் செல்வன் சினங்கரந்த போழ்தினால்
பைங்கொடி முல்லை மணங்கமழ வண்டுஇமிர்
காரோடு அலம்வரும் கார்வானம் காண்டொறும்
நீரோடு அலம்வரும் கண்.

(ஐந்திணையெழுபது, முல்லை, க)

'சிவந்த கதிர்களையுடைய பகலவன் சீற்றமடங்கிய மாலைக் காலத்தில், பச்சைக் கொடியையுடைய முல்லைச் செடிகள் பூத்து

மணங்கமழ்தலால், வண்டுகள் ஆலிக்கக் கார்ப்பருவத்தோடு தடுமாறுகின்ற முகில்களையுடைய வானத்தைக் காணுந்தோறும் என் கண்கள் நீரோடுகூடத் தடுமாறுகின்றன.'

'இசைத்தலு முரிய வேறிடத் தான'* என்னுந் தொல்காப்பிய நூற்பாவினுற், 'கதி'ரென்னுஞ் சொல் கதிர்ச்செல்வனென உயர்திணைக்கண் பால்பிரிந் திசைத்த தென்று தெளிதல் வேண்டும்: 'திங்கட் செல்வனுஞ் செவ்விய னல்லன்' † என்னுஞ் சிலப்பதிகாரத் தொடரிலுள்ள 'திங்கட் செல்வன்' என்னுந் தொடருக்கு ஆசிரியர் அடியார்க்கு நல்லார் உரைக்கும் விளக்க உரையையுங் காண்க. ஞாயிற்றினை மகனாக உருவகப்படுத தினமையின், அஞ்ஞாயிற்றுக்குள்ள வெம்மையை மகனுக்கு வெம்மையெனப்படுஞ் 'சினம்' என்பதன் சொல்லாற் குறித்தனர். எனவே சினங்கரந்த போழ்தினென்றது இங்கு 'வெம்மையடங்கிய போழ்தி' னென்னும்பொருட்டு; அஃதாவது ஒளி மடங்கிய போழ்தினென்க. ஆல் – அசை. வண்டு இமிர் என்பதற்கு ஏதுப்பொருட்டதான ஈற்று அகரம் விரிததுக்கொள்க. அங்ஙனமன்றி, மணங்கமழ்தலும் வண்டு இமிர்தலும் கார்ப்பருவக் குறிகளாகாமல் மாலைப்போழ்தின் குறிகளாய் நிற்றலால், 'வண்டு இமிர் கார்' என்று இயைத்து வினைத்தொகைப் பொருள் கோடல் பிழையாய் முடிந்திடும். மணங்கமழ்தலும் வண்டிமிர்தலும் மாலைப்போழ்தி னிகழ்ச்சிகளாமென்பதை 'வண்டூது மல்லிகைப்போதானும் அந்திப் பிறையானுங் கங்குற் பொழுதானும்'‡ என்று பேராசிரியர் திருச்சிற்றம்பலக் கோவைக்கண் உரை நிகழ்த்துமாற்றாற் றெளிந்து கொள்ளலாம். 'அலம்வரல்' ஒரு சொல். முதல் வந்த 'கார்' பருவத்தையும் பின் வந்த'கார்' முகிலையும் உணர்த்தின. கார்ப்பருவத்தின் அறிகுறி மழைநீ ராதலால், கார்ப்பருவத்தோடு முகிற் கூட்டங்கள் தடுமாறுகின்றன வென்பது வானெங்குங் கலந்து பெய்யும் மழைநீ ரிடையே முகிற் கூட்டங்கள் தடுமாறி யலைகின்றனவென்பது பெறப்படும். அந்நிகழ்ச்சியினை இந்நூலாசிரியர் மூவாதியார் தலைவியின் கலங்கிய கண்ணீரிடையே அவள் கருவிழி அங்குமிங்குந் தலைவன் வருகின்ற வழி கண்டு உகளும் நிகழ்சசியோடு சேர்த்துக் கூறுந் திறம் வியந்து மகிழற்பாலது. இங்ஙனமே இவ்வாசிரியர் இயற்கை நிகழ்ச்சிகளைத் தலைவன் றலைவியரின் அகப்பொரு ணிகழ்ச்சிகளோடு மிகப் பொருத்தமாகச் சார்த்திக் கூறி அவற்றை விளக்குதலில் மிக வல்லுநராய்க் காணப்படுகின்றார்.

---

* தொல், கிளவியாக்கம், ருக. † சிலப், வேனிற், ருக.
‡ திருச்சிற், கூகச.

"கல்லேர் புறவிற் கவினிப் புதன்மிசை
முல்லை தளவொடு போதவிழ—வெல்லி
யலைவற்று விட்டன்று வானமு முண்கண்
முலைவற்று விட்டன்று நீர்"*

என்னும் இவ்வைந்திணையெழுபதின் மற்றொரு பாட்டின் கண்ணும் இவர் அம்முறையினை அழகாக இயைத்துரைக்கின்றமை காண்க.

பிரிந்து சென்ற தலைவன் திரும்பி வரும் பருவம் கார்ப் பருவமாதலால், வான்குறி வாயிலாக அப்பருவம் வரக்கண்ட தலைவி, பருவம் வந்துந் தலைவன் வந்திலனே என்று பிரிவாற்றாமையினாற் கண்ணிறை நீர் கொண்டனளாய் வருந்துங் கருத்தினை யுட்கொண்டு மேற்பாட்டு இயற்றப்பட்டிருத்தலின், 'பருவங்கண்டு ஆற்றாளாய தலைமகள் தொழியோடு கூறல்' என்று அப்பாட்டிற்குத் துறைகூறிக்கொள்க.

திருவருளை முன்னிட்டுத் திருமணஞ் செய்துகொண்டு தலைவியைத் தனதில்லிற்கு அழைத்து வந்த தலைமகன் அத்திருமணக்கூட்டத்தின் பயனான இல்வாழ்க்கையினை மேற்கொள்ளத் தலைப்பட்டனன். இல்வாழ்க்கையினை மேற்கொள்வாரெல்லார்க்குந் தம்மையுந் தம்மைச் சார்ந்த மனைவி மக்கள் பெற்றார் உற்றாரையும் மற்றுமுள்ள ஏனை உறவின் முறையாரையும் ஆன்றோரையும் விருந்தினரையும் உண்டி உடை உறையுள் முதலியவற்றாற் பாதுகாக்குங் கடமையும், இவையொழிய இன்னும் ஏனையவாயமைந்துள்ள இல்வாழ்க்கைக் கடன்களும் உண்மையால், அவ்வெல்லாக் கடமைகளையும் முறைப்படி அவ்வக்காலங்களிற் செய்வதற்குப் பொருள் இன்றியமையாததாய் வேண்டப்படுகின்றது. 'பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்'† என்று தலைவந்த ஆசிரியன்மார் நிறுத்துக் கூறினமையும் இக்கருத்துப் பற்றியேயாகும். தலைவன் திருமணஞ் செய்து கோடற்கு முன்னால் வரைதற் பொருட்டுப் பொருள் தேடினானாதலாலும், அதற்கும் முன்னால், பொருள் தேடும் ஆண்மைப்பருவமே அவன் வரப்பெற்றிலனாதலாலும் வரைதலுக்குப் பின்னால் நிகழவிருக்கும் இல்வாழ்க்கைப் பொருட்டு அவன் முன்னமேயே பொருள் தொகுதத்துக் கொள்ளுதற்கு இடனில்லை. எனவே திருமணஞ் செய்துகொண்டதன் பின்னர்த்தான் தலைவன் தனது இல்வாழ்க்கைக்கு வேண்டப்படும் பொருளைத் தேடுதற்கு இடம் பெற்றான்.

---

* ஐந்திணை யெழுபது, உச. † திருக்குறள், அருளுடைமை, சு.

அற்றாயின், தலைவன் செல்வம் முதலியவற்றானும் நிகரற்றவனென்று இயற்கைப் புணர்ச்சிப் பகுதியில் அவற்காவதோரிலக்கணங் கூறுமிடத்து அகப்பொருணூல்கள் ஒத்துக்கூறுதல் என்னையோவெனின், தலைவன்றன் முன்னோர்களாற் றொகுத்து வைக்கப்பட்ட செல்வமெல்லாம் அவற்குண்மையின், அவ்வாறவன் கூறப்பட்டானென்க. எனினும், முதுகுரவராற் படைத்து வைக்கப்பட்ட செல்வத்தையே தலைவன் நிரம்ப உடையனாயினும் அச்செல்வங் கொண்டு அவன் தனது இல்வாழ்க்கையினை நடத்துதல் அவனது தாளாண்மைக்கு அழகாகாதாதலானும், மேலும் அம்முன்னோரின் பெருஞ் செல்வம் தன் காலத்திற் றனக்கு உதவியானாற் போலவே தனக்குப் பிற்காலத்திலும் தன் பின்னோர்க்கு உதவியாய் நிற்றற்பொருட்டு அதனை முதலாகக்கொண்டு ஏதானுமொரு துறையிற் புகுந்து ஒரு மடங்குக்குப் பன்மடங்காகப் பெருக்கி வைக்குங் கடப்பாட்டினைத் தலைவன் உடையனாதலால், அவன் அப்பெருக்குந் தொழிலை விடுத்துக் கைகொண்டமட்டும் எடுத்துத் தனது இல்வாழ்க்கைக்குச் செலவு செய்து கொள்ளுதல் பொருத்தமாகாதாதலானும், அம் முன்னோர் பணமென்பது தலைவனுக்குப் பொருள் தேடும் பருவமும் ஆற்றலும் வருந்துணையும் உதவியாய் நிற்றற்குரியதே யன்றி அதற்கு மேலும் அவற்கு அஃது உதவியாதற்கன்றாமாதலானும் தலைவன் தான் மேற்கொண்ட இல்வாழ்க்கையினை நடத்துதற்குத் தானே முயன்று பொருள் தேடுதலை விரும்பினான். முன்னோர் படைத்த பொருள் தனக்கு நிரம்பவே இருக்குமானாலுந் தலைவன் தன் முயற்சியினால் வரும் பொருள் கொண்டே தனது இல்வாழ்க்கையினை நடத்த விரும்பியதற்கு ஏது இதுவேயாமென்பது ஆசிரியன்மார்க்குங் கருத்தாதல், 'இனிப் பொருள்வயிற் பிரியுமேயெனின், முன்னாப் பொருளிலனாயினானும், ஆகவே எள்ளுநர்ப் பணித்தலும் இரந்தோர்க்கீதலும் என்னும் இவையெல்லாம் பொருட்குறைபாடுடையார்க்கு நிகழாமையின் இக்குறைபாடெல்லாம் உடையனாம்; அவை யுடையானது பொருவிறப்பு என்னையோவென்பது....... பொருட் பிணியென்பது பொருளிலனாய்ப் பிரியுமென்பதன்று, தன் முதுகுரவராற் படைக்கப்பட்ட பல்வேறு வகைப்பட்ட பொருளெல்லாங் கிடந்ததுமன், அது கொடு துய்ப்பது ஆண்மைத் தன்மையன்றெனத் தனது தாளாற்றலாற் படைத்த பொருள் கொண்டு வழங்கி வாழ்தற்குப் பிரியுமென்பது'* என்னும் ஆசிரியர் நக்கீரனார் உரையின்கட் பெறப்படும். இனி இதற்கு ஆசிரியர் பேராசிரியர் திருச்சிற்றம்பலக் கோவையா

* இறைய, ௩௯.

ருரையிற் 'பொருள்வயிற் பிரிதலென்பது முன்னவர்களாற் படைக்கப்பட்ட பொருள்கொண்டு இல்லறஞ் செய்தால் அதனான் வரும் பயன் அவர்க்கா மத்துணையல்லது தமக்காகாமையால் தமது பொருள்கொண் டில்லறஞ் செய்தற்குப் பொருடேடப் பிரியாநிற்றல்'* என்று கிளந்துரைக்கும் ஏதுவும் இங்குக் குறிக்கற்பாலது.

தன் முயற்சியினாற் பொருள்தேட விரும்புந் தலைவன் இனி அதனை எவ்வகையாற் றேடுவனோவெனின்; அது பலவகைப்படுமாதலின், ஈங்கதனை இன்னதுதானென்று குறித்துக் கூறுதல் கூடாமையாகும். உலகத்திற் பொருள் தேடும வழிகளாயுள்ள தொழில்களெல்லாம் அறிவு முயற்சியும் மெய்ம்முயற்சியுமென இருவகைப்படும். பண்டைக்காலத்தில் அறிவு முயற்சியென்பதனைப் புலவரும் அமைச்சரும் கணக்கரும் ஆசிரியன்மார் முதலான ஏனையொரு சிலரும் பயன்படுத்தி வந்தனர். இவரெல்லாரும் அக்காலத்தில் தமிழ் மொழியின் இலக்கண இலக்கியச் சமயங்களென்னும் பொது நூல்களையும் அவையேயல்லாமல் இன்னும் அவ்வத்தொழிற்குரிய சிறப்பு நூல்களையும் நன்கு கற்றுத்தேர்ந்த பெரும் புலவர்களாகவே திகழ்ந்திருந்தனர். அறிவின் முயற்சியினரான இவரெல்லாரும் தம் தலைவிமாரைப் பிரிந்து செல்வதெல்லாம் பெரும்பாலும் நாட் கணக்கிலேயே இருக்கும் தலைவியரைப் பிரியுந் தலைவன்மார் சில நாட்களிலேயுந் திரும்பித் தலைவியைச் சேருமுண்மை,"இன்ன நாளுள் வருதும்...என்று சொல்லிப் பிரியுமென்பது. நாட்குறித்துப் பிரியலுறாநின்ற தலைமகன் பிரிவுணர்த்திவிட்ட தோழி சென்று தலைமகட்குச் சொல்லியதற்குச் செய்யுள்:

"கேளே பெருக்கு மரும்பொருள் செய்தற்குக் கேடிறங்க
ணாளே குறித்துப் பிரியலுற் றார்நமர் தீயவிழி
யானே கனலுங்கொல் யானைச்செங் கோலரி கேசரிதன்
வானே புரையுந் தடங்கண்ணி யென்னோ வலிக்கின்றதே"†

என்று வரும் இறையனாரகப்பொருளுரைப்பகுதியினா லறியப்படும். பொருள வயிற் பிரிவுக்கு மட்டுமே இவ வறிவுமுயற்சியுடையார்க்கு இவ்வாறு நாட்கணக்கிற் பிரிவு நிகழுமென்று கூறியதாகக் கொள்ளல் வேண்டும். ஏனைய பிரிவுகட்கன்றென்க. ஏனென்றால், 'வேண்டிய கல்வி யாண்டுமூன் றிறவாது' ‡ என்று

---

* திருச்சிற், பொருள்வயிற்பிரிதல். † இறைய, சக.

‡ தொல, கற்பு, சஎ.

அகூ'

ஆசிரியர் தொல்காப்பியனார் அறிவு முயற்சியின் வேறுவகைப் பிரிவுகட்கு ஆண்டளவுரைத்துக் காலம் வரையறுத்தலினென் பது. இங்ஙனமே அறிவு முயற்சி மெய்ம்முயற்சியென்பவற்றை யும் பெரும்பாலும் அறிவின் நிகழ்ச்சியே யுடையதென்றும் பெரும்பாலும் மெய்யின் நிகழ்ச்சியே யுடையதென்றும் பகுத் துணர்ந்து கொள்ளல்வேண்டும். அவ்வாறன்றி அறிவு முயற்சிக் கண் மெய்யின் நிகழ்ச்சியே நிகழாதென்றும், மெய்ம்முயற்சிக் கண் அறிவின் நிகழ்ச்சியே நிகழாதென்றுங் கொள்ளலாகாது. ஏனென்றால் இரண்டு முயற்சிகளுந் தம்முண் ஒன்றற்கொன்றின் உதவி சிறிதாயினும் இல்லாமல் நிகழமாட்டாவாதலினென்பது.

இனி மெய்ம்முயற்சியென்பது முற்காலத்தில் அரசரும் வணிகரும் உழவரும் மறவர் கையாள் படியாள் முதலான அவர் தம் ஏவலாளரும் மேற்கொண்டு முயன்றுவந்த போரும் பண்ட மாற்றும் உழவும் கைவேலையுமான செயல்களேயாகும். இவர்தம் முள் அரசரும் வணிகரும் அவர்தம் ஏவலாளரும் நாடுங்காடுங் கடந்து வேற்று நாடுகட்குச் சென்று எதிர்த்துப் பொருதுங் கொண்டு கொடுத்தும் முயலுதலாற் பொருள் கைக்கொண்டு திரும்புவர். இனி அவரல்லாத உழவரும் அவர்தம் வேலைக்கார ரும் தாமிருக்கும் ஊரல்லாத ஏனைப்பல ஊர்களையுந் தமக்குரி மையில் வைத்திருப்பாராதலாற், பயிர் வைக்குங் காலங்களி லும் அறுப்புக்காலங்களிலும் அவ்விடங்கட்குத் தம் தலைவி மாரைப் பிரிந்துசென்று வைகித் தம்முடைய வேலைகளை முடித் துக்கொண்டு வினைப்பொருட் கையினராய் ஊர் திரும்புவர். மெய்ம்முயற்சி மேற்கொண்ட இவர்தமக்கெல்லாம் பிரிவென் பது பெரும்பாலுந் திங்கட்கணக்கிலும் பருவக்(இருது) கணக் கிலுமே நிகழ்வதாகும். ஏனென்றால், அறிவுமுயற்சியினா லாராய்ந்து ஒன்றைத் துணிதலினும் மெய்ம்முயற்சியினாற் செய்து அதனை முடித்தற்குக் காலம் மிகுதியும் வேண்டப்படு மாதலால், அறிவின் முயற்சியுடையார்க்குப் பிரிவுகள் பெரும் பாலும் நாட்கணக்கில் நிகழ்தலைப்போலல்லாமல் மெய்யின் முயற்சியுடையார்க்கு அவை பெரும்பாலும் திங்கட்கணக்கிலும் பருவக்கணக்கிலுமே நிகழ்வனவாயின வென்க. திங்கட் கணக்கி லும் பருவக்கணக்கிலும் பிரிவுகள் நிகழுமுண்மையை யும் 'இன்ன திங்களுள் வருதும் இன்ன இருதுள் வருது மென்று சொல்லிப் பிரியு மென்பது' * என்று இறையனா ரகப்பொருளுரையே எடுத்துக் கூறும். மெய்ம்முயற்சியுடைய மூவகையினருள்ளும் அரசருக்கும் வணிகருக்குமே நாடிடை யிட்டுங் காடிடையிட்டுமே சென்று வேற்று நாட்டின்கண் உறையுங்

* இறைய, ௨௧.

கட்டாயம் நேர்ந்திடுமாதலின், அவர்க்கெல்லாம் மேலே காட்டிய திங்கட்கணக்கு பருவக்கணக்குகட்குமேலும் ஒரோவொருகால் பிரிவு நிகழ்தலு முண்டு. என்றாலும் பண்டைக்காலத்தில் அவர் தமக்குங்கூட பிரிவு நிகழ்ந்ததெல்லாம் ஓராண்டுக்கு உட்பட்ட கால அளவினையுடையதே யல்லாமல் மற்றதற்கு மேற்பட்ட தன்றென்பது நினைவாய்க் கருத்தூன்றற்பாலது. இவ்வுண்மை இறையனாரகப்பொருளில்,

"பிரிவின் நீட்டம் நிலம்பெயர்ந் துறைவோர்க்
குரிய தன்றே யாண்டுவரை யறுத்தல்"

என்று வரையறுக்கப்படுகின்றது.

இனி நாளளவுப்பிரிவு திங்களளவுப்பிரிவு பருவவளவுப்பிரிவு ஆண்டளவுப்பிரிவுஎன்னும் இந்நான்களவுப்பிரிவுகளினும்பெரும் பாலதாய்ப் பண்டைக்காலத்தில் நிகழ்ந்து வந்ததும் நிகழ்தற் குரியதுமாயிருந்தது பருவவளவுப் பிரிவேயாம். உலகத்திலே அறிவு முயற்சியை விட மெய்ம்முயற்சியே வெளிப்படையாய்த் தோன்றிநிற்ப தாதலானும், அம்மெய்ம்முயற்சியினுள்ளும் ஒரு நாட்டினைப்பொருது வெல்லும் போர் முயற்சியே பெருமுயற்சி யாதலானும், வேற்று நாடுசென்று பொருது மீளற்குப் பருவவள வுப் பிரிவேனும் வேண்டப்படுமாதலானும், பிரிவென்பதற்குக் குறைந்த அளவும் மிகுந்த அளவும் அல்லாமல் நடுநிலையளவாய்த் தேர்தற்குரியது பருவவளவேயாதலானும் அக்கால அளவே பிரிவின் உணர்ச்சியினைத் தலைவிக்குந் தலைவனுக்குந் தக்காங்கு விளைத்தற்சேற்ற தாதலானும் மேற்காட்டிய கால அளவுகளிற் பருவவளவுப்பிரிவே பிரிவின் நிலைக்கு ஏற்றதும் பெரும்பாலும் பண்டைக்காலத்திற் பிரிவின் தோற்றத்ததாய் நிகழ்ந்ததும் ஆசிரி யன்மார்களாற் பிரிவுக்கென்று ஏனையவற்றினும் முதன்மை யாய்ப் பாராட்டப்பட்டதுமாகும்.

இனித் தலைவன் தலைவியர்க்குட் பிரிவு நிகழ்வதெல்லாந் தலைவன் நாடிடையிட்டுங் காடிடையிட்டும் வெளியேசென்று கருதிய தொழிலை முயன்று முடித்தற்கே யாதலின், அங்ஙன மொரு போர்ச்செயல் முதலான பெருஞ்செயல்களை மேற் கொண்டு முயன்று முடித்தற்கு உரியகாலம் அவற்கு வேனிற் பருவமேயாகும். இஃதன்றி ஏனைய பருவங்களெல்லாம் கருதிய வேலையைச் செய்து முடித்தற்கு மழையானும் பனியானும் இடையூறு பயப்பனவேயாகும். அவற்றுள்ளும் வேனிற் பருவத்தை அடுத்து வரும் கார்ப்பருவத்தில் ஏதொரு வேலை யையுமே எவர்க்குஞ் செய்ய வொட்டாதபடி அப்பருவம் தனது

மழைப்பெயலினுற்றடுத்து நிற்கும். இஞ்ஞான்றுங்கூட உலகத்தில் நிகழும் புறமுயற்சிகளெல்லாம் பெரும்பாலும் வேனிற் பருவத்திலேயே நிகழ்தலும், கார்ப்பருவத்தே நிறுத்தப்படுதலுங் கண்கூடாகும். எனவே ஒரு செயலையெடுத்து முயன்றுற்ற வேண்டுந் தலைமகன் அது செய்தற்குரிய வேனிற்பருவத்தே பிரிந்து, அச்செயன் முயற்சி கார்காலந் துவங்கியவுடன் நிகழ மாட்டாமையின் அக்கார்காலத் தொடக்கத்தே அம்முயற்சியை முடித்துக்கொண்டோ அல்லததனை நிறுத்திக்கொண்டோ மீள்வனென்பது நன்கு பெறப்படும். பருவகாலங்களின் இயற்கை நிகழ்ச்சி இவ்வாறாய் இருத்தலாற்றான் ஆசிரியர் தொல்காப்பியனார் தலைவன் பிரிந்து செல்லும் செலவுக்கு வேனிற் பருவத்தையும் அவன் திரும்பவும் மீண்டுவரும் வருகைக்குக் கார்ப்பருவத்தையும் வரம்பறுத்த இலக்கணமாய்க் குறித்து நிறுத்தி

> "நடுவுநிலைத் திணையே நண்பகல் வேனிலொடு
> முடிவுநிலை மருங்கின் முன்னிய நெறித்தே"*

எனவும்,

> "காரும் மாலையும் முல்லை"†

எனவும் அகத்திணையியலில் நூற்பா யாத்தார். பொருளிலக்கண ஆசிரியன்மார் பொதுவாகப் பொழுதுகளைப் பெரும்பொழுது சிறு பொழுது என்று பகுத்து, அவற்றுள் ஓராண்டுக் கால அளவினை அதன்கட் காணப்படும் பால்வேறுபட்ட இயற்கைத் தன்மைகளைக் கொண்டு அறுவேறு பருவகாலங்களாகவும், அங்ஙனமே ஒரு நாட் கால அளவினை மேற்காட்டிய அவ்வறுவேறு பருவகாலங்களின் இயற்கைத் தன்மைகளான அறிகுறி நிகழ்ச்சிகளை அதன்கட்கண்டு அறுவேறு கூறுகளாகவும் வகுத்து, முன்னவற்றைப் பெரும்பொழுதுகளெனவும் பின்னவற்றைச் சிறு பொழுதுகளெனவும் வழங்கி இலக்கண உரை நிறுத்துப் பொழுதுகளைக் கணக்கிட்டிருக்கின்றனராதலால், பெரும்பொழுதுகளில் வேனிற்பருவத்தையும் கார்ப்பருவத்தையும் முறையே பிரிவின் செலவுக்குங் கூடும் வருகைக்கும் உரிய பொழுதுகளாகக் காட்டினாற்போலவே, சிறு பொழுதுகளிலும் அவ் வேனில் கார்ப் பருவங்களின் இயற்கைகளமைந்த நண்பகற் பொழுதையும் அந்திமாலைப் பொழுதையும் ஆசிரியர் மேல் நூற்பாக்களிற் பிரிவு கூட்டங்கட்கு உரிய பொழுதுகளாகக் குறித்துக்காட்டினாரென் றறிதல்வேண்டும். இங்ஙனமே வேனிற்

---

*தொல், அகத்திணையியல், க. †தொல், அகத்திணையியல், ௬.

பருவத்தில் நிகழ்வதான தலைமகனது பிரிதலொழுக்கத்தைப் பாலையொழுக்கம் அல்லது பாலைத்திணையென்றும், கார்காலந் தொடங்கிய உடனே தலைவி தன் தலைவன் வரவினை எதிர்பார்த்திருப்பளாதலால், அக்கார்ப்பருவத்தே நிகழ்வதான தலைமகளது இருத்தலொழுக்கத்தை முல்லையொழுக்கம் அல்லது முல்லைத் திணையென்றும் பொருளாசிரியன்மார் வழங்குவராதலின், மேற்காட்டிய தொல்காப்பிய நூற்பாக்களிற் பிரிதலொழுக்கம் நடுவுநிலைத்திணை யென்னும் பெயரானும் இருத்தலொழுக்கம் முல்லை யென்னும் பெயரானுங் குறிக்கப்பட்டன.

இனி

> "அவற்றுள்
> நடுவண் ஐந்திணை நடுவணது ஒழிய"*

என்னும் அகத்திணையிய னூற்பாவிற்கு உரை கூறும்பொழுது ஆசிரியர் நச்சினார்க்கினியர் அந்நூற்பாத் தொடர்க்கண் வந்த 'நடுவணது' எனபதைப் பாலைத்திணை யென்று உரைகூறி, மற்றதற்கு, 'அப்பாலை ஏனையபோல ஒருபாற் படாது நால்வகை நிலத்திற்கும் உரியவாகப் புலனெறி வழக்கஞ்செய்து வருதல் பற்றிய பாலைக்கு நடுவணதென்னும் பெயர் ஆட்சியுங் குணனுங் காரணமாகப் பெற்ற பெயர்' என்று பெயரேதுவுங்கூறி அதன் மேலும் "நடுவு நிலைத்திணையே நண்பகல் வேனில்' என ஆளப் என முன்னைங் கூறிக் காட்டிய தொல்காப்பிய நூற்பாவினையே அதன் ஆட்சிக்குக் காட்டாகவுங் காட்டி விளக்குவராதலால், 'நடுவு நிலைத்திணை' யென்னும் பெயரான் மேற்கூறப்பட்டது பாலைத்திணையா மென்றுங் கொள்க வென்பது.

இனி நச்சினார்க்கினியர் இந்நூற்பாவுரையினைத்தொடர்ந்து 'நடுவணது' என்னுஞ் சொல் பாலைத்திணைக்குப் பெயராமாற்றிற்கு ஏதுக்காட்டி மேற் கூறுவதொன்றும் ஈண்டைக்கு மிக இன்றியமையாததாய் நின்று உதவுகின்றது. அதாவது: 'உலகியற் பொருளான அறம் பொரு ளின்பங்களுள் நடுவணதாய பொருட்குத் தான் காரணமாகலானும் நடுவணதெனக் குணங்காரணமாயிற்று என்பது. இதனுட் கூறப்பட்ட கருத்து 'பாலைத்திணை பொருள் வருவாய்க்கு ஏதுவாயிருத்தலால், அது நடுவண தெனப்பட்ட' தென்பது. பாலைத்திணை யென்பது தலைமகனது பிரிதலொழுக்க மென்று மேல் விளக்கிக் காட்டினமாகலானும், நச்சினார்க்கினியரும இங்குத் 'தலைமகன் 'பிரிந்து செய்

---

* தொல். அகத், ௨.

யும் முயற்சி, பொருண் முயற்சியாகுமென்பதுபட உரை நிகழ்த்துதலானும் பண்டைக் காலத்திற் றிருமணம் நடந்து இல்லறம் நிகழ்த்தத் தொடங்கிய பின்னர்த் தலைவனுக்கு நிகழும் பிரிவு பெரும்பாலும் பொருள்வயிற் பிரிவேயா மென்பதும், பொருள் வயிற் பிரிதலையே ஏனை யெல்லாப் பிரிவுகளினும் பிரிவிலக்கணத்துக் குரியதாகப் பண்டையாசிரியன்மா ரெல்லாரும் எடுத்துப் பாராட்டின ரென்பதும், இல்வாழ்க்கை யமர்ந்த திருமணமக்கட்கு இயல்பின் நிகழ்வதான இப்பிரிவே 'ஓதல், காவல், பகைதணி வினை, வேந்தர்க் குற்றுழி' முதலான நாடுங் காடுங் கடந்து செல்லும் ஏனைப்பிரிவுகளை யெல்லாம் * அவை தாமும் பொருள் நோக்கங் கொண்டனவேயா மாதலின் தன் கண் ணடக்கித் தானே அவை யெல்லாவற்றினும் முதன்மைத் தாய்க் கருதப்படுங் கருத்துடையதாமென்பதும் நன்கு விளங்கா நிற்கும். எனவே திருமணங்கூடி இல்வாழ்க்கையினை மேற்கொண்ட தலைமகனுக்குப் 'பிரிவு' என்று கூறிய அளவானே, அது பெரும்பாலும் பொருள் வயிற் பிரிவினையே உணர்த்துமென்றறிதல் வேண்டும். ஆகவேதான் பிரிவினிலக்கணத்தைக் கூறவந்த இக்கட்டுரை 'பொருள்வயிற் பிரிவினை'யே தனக்கு, முதனோக்கமா வெடுத்துத் தலைப்பணியப் பெற்றதென்பது.

இன்னும் ஒன்று: பிரித லொழுக்கத்தினைப் பாலைத்திணையென்று கூறினாற் போலவே அப்பிரிவிற்குரிய நிலமும் பாலைநிலமென்றே பண்டைப் பொருளிலக்கணப் பனுவல்கள் கூறுநிற்கும்.

"கள்ளியங் காட்ட புள்ளியம் பொறிக்கலை
வறனுற லங்கோ டுதிர வலங்கடந்து
புலவுப்புலி துறந்த கலவுக்கழி கடுமுடை
யிரவுக்குறும் பலற நூறி நிரைபகுத்
திருங்கன் முடுக்கர்த் திற்றி கெண்டுங்
கொலைவி லாடவர் போலப் பலவுடன்
பெருந்தலை யெருவையொடு பருந்துவந் திறுக்கு
மருஞ்சுர மிறந்த னோடியோர்க்கு." †

என்று அகநானூற்றின் கண்ணும்,

"மரையா மரல்கவர மாரி வறப்ப
வரையோங் கருஞ்சுரத் தாரிடைச் செல்வோர்

---

* இறைய, ௩௫. † அகம், ௯௭.

சுரையம்பு மூழ்கச் சுருங்கிப் புரையோர்த
முண்ணீர் வறப்பப் புலர்வாடு நாவிற்குத்
தண்ணீர் பெறாஅத் தடுமாற் றருந்துயரங்
கண்ணீர் நனைக்குங் கடுமைய காடு.” *

என்று கலித்தொகைக்கண்ணும் ஆன்றோர் செய்யுட்கள் பிரிவிற்குப் பாலை நிலங் குறித்து வந்திருத்தல் கண்டுகொள்க. அற்றாயின் இத்தகைய கொடும் பாலைவனத்திற் றலைமகன் சென்று பொருள் தேடுதற்கு அங்குள்ள வசதிகள்தாம் யாவையோ வெனின், அற்றன்று, ஈங்குக் கூறப்பட்டது பொருள் தேடும் முயற்சியன்று; அப்பொருள் தேடும் முயற்சிப் பொருட்டுத் தலைவியைப் பிரிந்து செல்லும் பிரிவே ஈண்டுக் கூறப்பட்டதாம்; எனவே பொருள் தேடுங் களம் இங்குக் கூறப்பட்டிலதென்றும், மற்றுப் பிரிந்து செல்லுங் களமே இங்குக் கூறப்பட்டதென்றும் அறிதல் வேண்டும். ஓர் ஊரைவிட்டுப் பிறிதோரூர்க்கோ அல்லது ஒரு நாட்டை விட்டுப் பிறிதொரு நாட்டிற்கோ பிரிந்து செல்கின்றவர்கள், அவற்றி னிடையிடையே முள்ளுங் கல்லும் மணலும் வெளிபுங் காடுஞ் செடியும் மிடைந்து எதிரும் இயற்கை நிலத்தூடு செல்லல் வேண்டும். அவ்வியற்கை நிலத்தினையே பாலை யென்ப. இதனை,

“முல்லையுங் † குறிஞ்சியு ‡ முறைமையிற் றிரிந்து
நல்லியல் பிழந்து நடுங்குதுய ருறுத்துப்
பாலை யென்பதோர் படிவங் கொள்ளும்”‡

என்னுஞ் சிலப்பதிகார வடிகளினும்,

“நிழலுரு விழந்த வேனிற்குன் றத்துப்
பாலை சான்ற சுரம்.” ǂ

என்னும் மதுரைக்காஞ்சி யடிகளினும் அவற்றினுரைகளினுந் தெளியக் காண்க.

தலைமகன் தன் தலைமகளைப் பிரிவதற்கு முன்பு அவன் தன்னூரின்கண் இருந்து பொருள் விருப்பத்தினால் உந்தப்படுவானாதலால், அவற்கப்போது பொருளின் மேலேயே நினைப்பிருக்கும். அப்போது தலைமகளைப் பிரிவதன் உணர்ச்சி அவனுள்ளத்தில் எழுந்து தோன்றாது. இனி, அவன் தலைமகளைப்

* கலித், பாலை, ௫.　　† காட்டு நிலம்.　　‡ மலைநிலம்.
‡ சிலப், கக: ௬௪-௬.　　ǂ மதுரைக் காஞ்சி, ௩கக-௨.

பிரிந்து வேற்று நாட்டிற்குச் சென்று சேர்ந்துவிட்ட பிறகு பொருள் தேடும் முயற்சியைத் துவங்கிவிடுவானாதலால், அவற்கப்போது அம்முயற்சியை முடித்தலிலேயே மிக முனைந்த நினைப்பிருக்கும். அப்போது தலைமகளைப் பிரிந்ததின் உணர்ச்சி அவனுள்ளத்தில் எழுதற்கே இடமில்லை. ஆகவே தலைவனுக்குத் தன்னூரின்கண்ணும் வேற்றூரின் கண்ணும் வெவ்வேறிரு நினைப்புக்களும் அவனுள்ளத்தைக் கௌவிக் கவர்ந்து பிரிவுணர்ச்சி மிக்கெழற்கு இடந்தராது முனைத்து நிற்றலால், மற்று அவன் அவ்விருவேறூர்களின் இடைக்கண்ணதான சுரநெறி பற்றும் போதுமட்டும் தன் தலைமகளைப் பிரிந்த பிரிவுணர்ச்சி ஆங்கவனுணர்ச்சிக்குப் புலன் வழிப்போந்த இயற்கைக் காட்சிகளாலும் நிகழ்ச்சிகளாலும் மிக்குத் தோன்றி அவன் நெஞ்சத்தினைக் கவர்ந்து நிற்குமென்க. ஆகவே தலைவனுக்குப் பிரிவினுணர்ச்சி பாலை நிலத்தேயே நிகழுமுண்மை தெளியப்பட்டது. இனித் தலைமகளும் தலைவன் தன்னூர்க்கண் இருக்கும்போது தன்னொடு கூடியிருப்பனாதலால், அவட்கப்போது பிரிவினுணர்ச்சி மிக்கெழுமாறில்லை. மற்றுத் தன் தலைவன் தான் வேண்டும் ஊர்க்குச் சென்றுவிட்ட பின்னர் அவன் ஆங்குத் தொடங்கும் முயற்சி திருவருளால் நன்கு நிறைவேறல் வேண்டுமென்னும் நினைப்பினளாயிருப்பளாதலால் அப்போதும் அவட்குப் பிரிவினுணர்ச்சி மிக்குத் தோன்றுமாறில்லை. ஆனால் அவன் தன் ஊரினின்றும் புறப்பட்டுப் பாலை நெறிபற்றிச் செல்லும்போது தான் 'ஆ, இங்ஙனமும் நம்மைப் பிரிந்து செல்கின்றானே' என்னும் பிரிவினினைப்பும், அவன் தன் செயல் முற்றி மீண்டும் அவ்வாரதர் பற்றும்போது கார்காலந் தொடங்கி விடுதலால் தலைவி காமக்குறிப்பு நிகழப்பெற்றுத் தனக்கு நிகழ்ந்த அந்நிகழ்ச்சியின் வாயிலாக அந்நிகழ்ச்சிக்குரிய இயற்கைத் தோற்றங்களையும் அத்தோற்றங்கள் புலப்பட்டு விளங்கும் இயற்கை நிலமாகிய பாலைநிலத்தினையும் அவ்வழி வரற்குரிய தலைவன் வருகையையும் நினைப்பளாதலின், 'கார்காலந் துவங்கியும் தலைவன் இன்னும் வந்திலனே' என்னும் பிரிவினினைப்புந் தலைமகள் மிகவும் உணரப்பெறுவள். மேலுந் தலைவன் பாலை நெறியிற் செல்லும்போதுதான் அந்நிலத்தின் கொடுமைக்கு அஞ்சி அவ்வச்ச நினைப்பின் வாயிலாகத் தன்கட்கிடந்த பிரிவுணர்ச்சியினை அவள் நெஞ்சு இடையறாது நினைத்தற்கிடம்பெறுமென்பது. எனவே தலைமகள் தன் தலைவன் பாலைக்கண்ணானும் போதே பிரிவினுணர்ச்சி மிக்கெழப் பெற்றுத் தன் தனிமைக்கும் அவன்றன் தனிமைக்கும் எண்ணி வருந்துவளென்பது உணரப்படும். ஆகவேதான் பிரிதலொழுக்கமாகிய பாலைத் திணைக்கு அகப்பொரு

விலக்கணத் தொல்லாசிரியன்மார் பாலை நிலத்தினை உரிய நில மாக நிறுத்து ஆணையிட்டுரைத்தனரென் றறிந்து கொள்க.

இனித் தலைமகன் பொருள்வயிற் பிரியுங்கால் தன் பிரிவினைத் தலைவிக்குந் தோழிக்கும் அறிவியாமலே பிரிந்து செல்லுதலும் உண்டென்பது,

"நிலம்பெயர்ந் துறையும் எல்லாப் பிரிவும்
ஒழிந்தோர் அறியவும் அறியா மையும்
கழிந்துசேட் படூஉ மியற்கைய வென்ப."

என்னும் இறையனாரகப்பொரு ளூற்பாவினாற் பெறப்படும். இந்நூற்பா பண்டைக் காலத்தில் ஒருசார் நிகழ்ந்த நிகழ்ச்சியையே குறிக்கின்றதென்பது 'அறியவும் அறியாமையும்' என்று 'அறிவித்துப் பிரிதல் அறிவியாது பிரித'லென்னும் இரண்டுவகைகளையும் எடுத்துக் கூறினமையாற் றெளியப்படும். இன்னும் அவ்விரண்டனுள்ளும் அறிவித்துப் பிரிதலையே முன்னெடுத்துக் கூறினமையால், அதுமட்டுமே பண்டைக்காலத்திற் பெரு வழக்காய் நிகழ்ந்ததென்பதும், முறைக்கு ஒத்ததென்பதும் அந்நூற்பாமுறையினாலேயே விளங்கிக் கிடக்கின்றன. ஆகவே அறிவியாமற் பிரிதல் அங்ஙனம் பண்டைத் தமிழரிடையே பெருவழக்கிற்றாய் நிகழாததோடு, முறையாகு மென்றுங் கருதப்படவில்லையென்பதும் அதுகொண்டே முடிக்கப்படும். இவ்வுண்மையைப் 'பிரிகின்றவன் தலைமகளையுந் தோழியையும் அறியச் சொல்லிப் பிரிதலும் உடையன், அறியாமைப் பிரியவும் உடையன்; இரண்டும் இலக்கணமென்பது. அவற்றுள் அறியாமைப் பிரிதல் பொருத்தமின்று அறியப்பிரிவது யான் இன்னதோர் இடத்து இன்னதொரு கருமம் முடித்து வருவேனென அவளை உடன்படுவித்துப் பிரிவதே தக்கது.' என்று அந்நூற்பாவின் உரையும் நன்கெடுத்து விளக்கிற்று. மேலும், காடிடையிட்டும் நாடிடையிட்டும் நெடுந்தொலைவு சென்று நெடுநாள் தங்கி அதற்கப்பால் மீளல் வேண்டுந் தலைமகன் தன் செலவினைத் தன் நலத்தினையே பெரிது விரும்பி அதன் பொருட்டே இடையறாத நினைப்பினளாய் உயிர்தாங்கி உடன்வாழ்ந்து ஒத்துழைத்து வரும் தன் அருமைத் தலைவிக்கு அறிவியாமலே பிரிந்து செல்லல் அவள் தனக்கு ஓயாப் பெருங்கவலையை வருவித்து அதன் முகத்தால் ஒரோவொருகால் அவளுயிருக்கு இறுதியையும் விளைத்துவிடுமாதலால், அங்ஙனம் அவட்கு அறிவியாமற் பிரியுந் தலைமகனது

---

* இறைய, ௩௨.

பிரிவு முடிவில் அவன்றனக்கே கூறொணாப் பேரின்னலைத் தப்பாமல் விளைவித்திடும் பிழைபட்ட செயலாய் முடிந்திடுமென்றறிதல் வேண்டும். அற்றன்று, ஒரு நொடி நேரந்தானுந் தன் தலைவன் பிரிவுக்கு உடன்படாத் தலைவிக்கு, விரைந்து சென்று முடித்தற்குரிய ஒரு முதன்மைச் செயலின் பொருட்டாகவேனும் அல்லது தலைவிக்கு அச்சந் தரற்பாலவான போர் நிகழ்ச்சிகளைப் போன்ற கொடு நிகழ்ச்சிகளின் பொருட்டாகவேனும் தான் பிரியவிருத்தலைத் தலைவன் அறிவிப்பானாயின் ஒரோவொருகால் அவள் பிடிவாதமாய் நின்று மறுத்து அச்செலவினைத் தடைப்படுத்துதலுஞ் செய்வளாதலால், அஃதவட்கு அஞ்ஞான்று அறிவிக்கப்படுதல் பிழையாய் முடியுமெனின், அறியாது கூறினாய்; பொய்யினின்றும் மெய்யை யறியவல்ல பேரறிவாற்றலும், அப்பேரறிவாற்றலால், எத்துணைதான் இடையூறு பயந்து முடிவில உயிர்க்கிறுதியையே விளைப்பதாயினுந் தாம் மெய்யென்று காணுஞ் செயலினை அக் கொடு விடையூறுகளினிடையே நிறீஇ அஞ்சாது ஆற்றவல்ல பேராண்மையும் உடைய பெண்டிராயின், அவர்தாம தம் தலைவன்மார் எத்துணைக் கொடுஞ் செயலையே யெடுத்துரைத்து அவற்றின் பொருட்டுப் பிரிதல் வேண்டுமென்று கூறுவாராயினும் முறையென்று கண்ட அவற்றிற்காக அவரெல்லாம் உடனே இசைந்து நிற்பரல்லது தடுத்து நிற்ப ரல்லரென்க. இக் கருத்தினோடொப்பவே இறையனாரகப்பொரு ளுரையாசிரியரும் மேற்காட்டிய உரையினைத் தொடர்ந்து 'தலைமகன் பிரிந்து பொருள் முடித்துமென்றக்கால் தலைமகள் ஆற்றாராபவே யெனின், அவரது ஆள்வினையை இடையூறு செய்தாராவர் பிற' என்றும், 'சாதலுங் கெடுதலும் எல்லா உயிரும் அறியுமேயெனினுஞ் செத்தாலோ என்பதனாற் கலங்கார் மனன' என்று மெல்லாங் கூறிக்கொண்டு வந்து முடிவில் 'அறியப் பிரிவதே வலிவுடைத்து' என்று தங்கோள் நிறீஇ அப்பகுதியைப் பற்றிய தமது உரையினை முடித்திடுதலுங் கண்டுகொள்க. பண்டைத் தமிழ்ப் பெண்மணிகள் தக்கதறியும் அறிவினும் உற்ற தஞ்சா ஆண்மையினும் மிக்கு விளங்கினார்களென்பதற்கு,

"நெருந லுற்ற செருவிற் கிவள்கொழுநன்
பெருநிரை விலங்கி யாண்டுப்பட் டனனே
இன்றும், செருப்பறை கேட்டு விருப்புற்று மயங்கி
வேல்கைக் கொடுத்து வெளிது விரித்துடீஇப்
பாறுமயிர்க் குடுமி யெண்ணெய் நீவி

யொருமகனல்ல தில்லோள்
செருமுக நோக்கிச் செல்கென விடுமே."*

என்பது போன்ற பழம்பாட்டுகள் சான்றாய் நின்று உண்மை யறிவித்தலுங் காண்க. எனவே, தலைமகன் தனது பிரிவினைத் தன் அருமைத் தலைவிக்குத்தெரிவித்து அவள் உடன்பாடுபெற்று அப்பிரிவு காலங்களில் அவள் நலத்துக்கு வேண்டும் அறிவுரைகள் கூறி அவள்தன் தோழிக்கும் அவளைப் பாதுகாத்து நிற்றற்குரிய விழிப்புரைகள் கட்டளையிட்டுப் பின்பு பிரிதலே ஆசிரியன்மாராற் பாராட்டப்படும் பண்டைப் பழக்கமாம் என்பது செவ்விதின் விளங்கிற்று.

இனிப் பொருள்வயிற் பிரியுந் தலைமகன் தன் தலைவியையும் உடன் கூட்டிச் செல்லும் வழக்கம் பண்டைக்காலத்தில் நிகழ்தலில்லை யென்பதும் அறியற்பாலது. என்னென்றால், தலைவன் தன் தலைவியையும் உடன்கூட்டிச் சென்று பொருள் தேடுவதொன்றுண்டானால் அவர்தம்முட் பிரிவென்பது ஒன்று இல்லையாய் அவ்வாற்றாற் 'பொருள்வயிற் பிரிவு' என்னுந் தொடர் முதலாயினவும் பொருளாசிரியன்மாரால் ஓரிலக்கண வுறுப்பாக எடுத்து விளக்கப்படுதலு மில்லையா யொழிபு மாதலி னென்பது. தலைவியையும் உடன்கூட்டிச் செல்லும் வழக்கம் பண்டு நிகழ்ந்ததில்லை யென்பதனை,

'முந்நீர் வழக்கம் மகடூஉவோ டில்லை.' †

என்று ஆசிரியர் தொல்காப்பியனார் அகத்திணையியலிற் கட்டளையிட் டுரைத்திருப்பவும், அந்நூற்பாவுக்கே 'தலைமகன் தன் தலைவியோடு கலத்திலேறிக் கடல்தாண்டிச் செல்வதில்லை, ஆயினுங் காலிலேறி நாட்டிடையே செல்வதுண்டு' என்று தமக்கு வேண்டியவகையாய்ப் பொருந்தாப் பொருளுரைத்துப்'பொருள் பொருட்டுத் தலைவன் தன் தலைவியொடு செல்லும் வழக்கமும் பண்டு நிகழ்தலுண்டு' என்று உண்மையைத் திரித்துக் கூறுவாருமுளர். ஆனால் ஆசிரியர் நச்சினார்க்கினியர் அந்நூற்பாவுக்கு உரைக்குந தமதுரைக்கண் அவர்கோளெடுத்துத் தக்க ஏதுக்கள் காட்டுவதுடன் அதற்கு இலக்கியச் சான்று இல்லை யென்றொன்றுங் கூறித் திட்ட வட்டமாய் மறுத்திடுதலின், அது பொய்க் கோளாமென்றே கொள்ளற்பாற்று. ஆசிரியர் தொல்காப்பியனார் தலைவன் தன் தலைவியையும் உடன்கூட்டிக்கொண்டு தன்னூர் கடந்துசெல்வதெல்லாம், அவளுடன் யாறுங் குளனும்

* புறநானூறு, ௨௭௯. † தொல், அகத், ௩௪.

படிந்து நீர் விளையாடியும், குன்றும் பொழிலும் தங்கிப் பூ விளையாடியும் அங்கெல்லாங் காணப்படும் புது மகிழ்ச்சியினை நுகர்ந்துறைதற்கேயா மென்று,

“யாறுங் குளனுங் காவும் ஆடிப்
பதியிகந்து நுகர்தலும் உரிய வென்ப.”*

என்று கற்பியற்கண் ஒரு நூற்பா இயற்றி நிறுத்துகின்றார்.

“நான்மாடக் கூடன் மகளிரு மைந்தருந்
தேனிமிர் காவிற் புணர்ந்திருந் தாடுமா
ரானா விருப்போ டணியயர்ப காமற்கு
வேனில் விருந்தெதிர் கொண்டு.’ †

என்றுமற் றிதற்கே பழந்தமிழின் இலக்கியச் சான்றுகளும் உள்ளன. ஆகவே பொருள் நாடி வேற்று நாட்டுக்குச் செல்லுந் தலைமகன் தன் தலைவியையும் உடன்கூட்டிச் செல்லல் பண்டைத் தமிழ் வழக்கன்றென்றே தெற்றென உணரல் வேண்டும்.

இனி, இறையனாரகப்பொரு ளாசிரியர்,

“கற்பினுட் டுறவே கடிவரை வின்றே.”

என்று நூற்பா யாத்துரைத்தலின், தலைமகன் பொருள் வேண்டுங்காலெல்லாம் தன் தலைவியைப் பிரிந்து அஞ்சாமையோடும் அறிவு ஆண்மைகளோடும் நின்று போதுமான பொருட்டிரளைக் குறைவிலாமற் றேடிக்கொணர்ந்து தான் மேற்கொண்ட இல்வாழ்க்கையினைத் தன் வாழ்க்கைத் துணையுடன் கூடி யமர்ந்து ஒழுங்காய் நிகழ்த்தி வருவனென்பது. மேல் நூற்பாவினுட் ‘கற்பினுட் கடிவரைவின்றே’ யென்றமையாற், பிரிவிற்குக் களவினுட் கடிவரை வுண்டென்பது விளங்கும். அவ்வாற்றாற்களவொழுக்கம் பிரியாமைக்கும், கற்பொழுக்கம் பிரிவுக்குமே இலக்கணமா யமைந்திட்டனவென்க. ஆசிரியர் திருவள்ளுவனார் தாமெடுத்துக்கொண்ட காமத்துப்பாற் கற்பியற்கண் ‘பிரிவாற்றாமை’ முதல் ‘ஊடலுவகை’ யீறாகப் பிரிவியலுணர்த்துந் தலைப்புக்களையே கற்பியலிலக்கணமா வெடுத்து நிறீஇ விளக்குதலாலும் இவ்வுண்மை தெளியப்படும்.

---

* தொல், கற்பு, ௫௰. † கலித்தொகை, மருதம், ௨௭. ‡ இறைய, ௧௪.

நால்வர்